# மட்டக்களப்பு மாநகர சபையின் அறுபத்தோராவது சபை அமர்வுக்கான கூட்டறிக்கை. 03-06-2022

மட்டக்களப்பு மாநகர சபையின் அறுபத்தோராவது சபை அமர்வு (51வது பொதுக் கூட்டம்) 2022-06-03ம் திகதி (வெள்ளிக்கிழமை) மு.ப. 09:30 மணிக்கு மாநகர சபா மண்டபத்தில் கௌரவ மாநகர முதல்வர் திரு. தியாகராஜா சரவணபவன் அவர்களின் தலைமையில் இடம் பெற்றது.

**சமூகமளித்த சபை உறுப்பினர்கள்:**

01. கௌரவ பிரதி முதல்வர் கந்தசாமி சத்தியசீலன்
02. கௌரவ உறுப்பினர் மயில்வாகனம் நிஸ்கானந்தராஜா
03. கௌரவ உறுப்பினர் ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை
04. கௌரவ உறுப்பினர் தம்பிராஜா இராஜேந்திரன்
05. கௌரவ உறுப்பினர் கந்தசாமி ரகுநாதன்
06. கௌரவ உறுப்பினர் விஜயகுமார் பூபாலராஜா
07. கௌரவ உறுப்பினர் சிவானந்தன் மேகராஜ்
08. கௌரவ உறுப்பினர் புஸ்பராஜ் ரூபராஜ்
09. கௌரவ உறுப்பினர் துரைசிங்கம் மதன்
10. கௌரவ உறுப்பினர் யூசைமுத்து பிலிப்
11. கௌரவ உறுப்பினர் சிவம் பாக்கியநாதன்
12. கௌரவ உறுப்பினர் சச்சிதானந்தம் கமலரூபன்
13. கௌரவ உறுப்பினர் சீனித்தம்பி ஜெயந்திரகுமார்
14. கௌரவ உறுப்பினர் மாசிலாமணி தியாகராஜா ஸ்ரீஸ்கந்தராசா
15. கௌரவ உறுப்பினர் அப்துள்காதர் முகம்மது லத்தீப்.
16. கௌரவ உறுப்பினர் மயில்வாகனம் ரூபாகரன்
17. கௌரவ உறுப்பினர் அந்தோனி கிருரஜன்
18. கௌரவ உறுப்பினர் மாசிலாமணி சண்முகலிங்கம்
19. கௌரவ உறுப்பினர் இராசலிங்கம் அசோக்
20. கௌரவ உறுப்பினர் செல்வராசா குமார்
21. கௌரவ உறுப்பினர் திருமதி. மேரி கிறிஸ்டினா சசிதரன்
22. கௌரவ உறுப்பினர் திருமதி. சாரதாதேவி கங்கேஸ்வரன்
23. கௌரவ உறுப்பினர் திருமதி சசிகலா விஜயதேவா
24. கௌரவ உறுப்பினர் திருமதி. பற்றிமா பல்தசார்
25. கௌரவ உறுப்பினர் தெய்வநாயகம் சிவலிங்கம்
26. கௌரவ உறுப்பினர் பேரின்பசாமி சுரேஸ்குமார்
27. கௌரவ உறுப்பினர் வடிவேல் குபேரன்
28. கௌரவ உறுப்பினர் திருமதி. வர்ணேஸ்வரி ரவிச்சந்திரன்
29. கௌரவ உறுப்பினர் ஸ்ரீபன் ராஜன்
30. கௌரவ உறுப்பினர் செல்வி. தயாளகுமார் கௌரி
31. கௌரவ உறுப்பினர் திருமதி.சிவாகரன் சுலக்ஷனா
32. கௌரவ உறுப்பினர் ஜேம்ஸ் நவரெத்தினராசா திலீப்குமார்
33. கௌரவ உறுப்பினர் தம்பிப்பிள்ளை சிவானந்தராஜா
34. கௌரவ உறுப்பினர் சூசைமுத்து கிளனி வசந்தகுமார்.

DRAFT

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்:**

01. திரு.என்.மதிவண்ணன் - மாநகர ஆணையாளர்.
02. திருமதி.சி.லிங்கேஸ்வரன் - மாநகர பொறியியலாளர்.
03. திரு.சி.ராஜ்மோகன் - பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - சபைப்பகுதி.
04. திரு.எஸ்.சிவபுண்ணியமூர்த்தி - ஆராச்சி.
05. திரு.எஸ்.ஜயந்தன் - அலுவலக பணியாளர் ( ஒளிப்பதிவுக் கடமை)
06. திரு.எஸ்.இ.இருதயராஜன் - ஓய்வு பெற்ற அலுவலக பணியாளர் (வீடியோ பதிவு)
07. திரு.எஸ்.நிக்சன் - வர்ணம் தீட்டுபவர் (ஒலித் தொகுதி ஒழுங்கமைப்பாளர்)

## • இறைவணக்கம்

கௌரவ முதல்வர் அவர்கள் சபைக்கு வருகை தந்தவுடன் அவரால் அறிவிக்கப்பட்டதற்கமைய ஒரு நிமிட இறை வணக்கம் இடம் பெற்றது.

## • தலைமை உரை

கௌரவ முதல்வர் அவர்கள் தமது உரையினை நிகழ்த்துகையில், இன்றைய 61வது சபை அமர்விற்கு வருகை தந்திருக்கும் கௌரவ பிரதி முதல்வர் அவர்களே, மாநகர சபையின் கௌரவ உறுப்பினர்களே, மாநகர ஆணையாளர் அவர்களே, பொறியியலாளர் அவர்களே, சபைப் பகுதியின் பிரதம லிகிதர், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் எனது அன்பு கனிந்த வணக்கம்.

மட்டக்களப்பு மாநகர சபையின் கடந்த மாத செயற்பாட்டில் கடந்த பாதீட்டின் பல விடயங்களை அடையக் கூடியதாக இருந்தது. அந்த வகையில் உலக வங்கியின் அனுசரணையுடன் மட்டக்களப்பு மாநகர எல்லைக்குள் செய்து முடிக்கப்பட வேண்டிய இரு வேலைத் திட்டங்களுக்கு கேள்வி கோரப்பட்டு அவை ஒப்பந்தம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. அதே போல் மாநகரசபையின மைல்கல் வேலைத் திட்டமாக (Mile Stone Project) இருந்த அகலமாக்கப்பட்ட புகையிரத வீதியை முடிவுறுத்துவதற்கான ஒப்பந்தமும் கைச்சாத்திடுவதற்கான நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்திற்குத் தேவையாக இருந்த மின் தகனசாலை அமைப்பு வேலைக்கும் கேள்வி கோரப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று பாதீட்டில் முன்மொழியப்பட்ட பல வேலைகள் நிறைவடைந்திருக்கின்றன. ஏனைய வேலைகள் பல செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவ்வேலைகளை முன்னெடுப்பதற்கு எமக்கு உறுதுணையாக இருக்கும் எமது மாநகர ஆணையாளர், பொறியியலாளர்,வேலைப்பகுதி உத்தியோகத்தர்கள் உட்பட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், இதேபோன்று 2022ம் ஆண்டு பாதீட்டிற்கான வேலைகளையும் மிக விரைவாக நிறைவேற்றுவதற்கு அவர்கள் எங்களுடன் துணை நிற்பார்கள் என எதிர்பார்த்து எனது தலைமை உரையினை நிறைவு செய்து கொள்கின்றேன்.

## • கடந்த சபை அமர்விற்கான கூட்டக் குறிப்புகளை உறுதிப்படுத்தல்.

1. 07.04.2022ம் திகதிய 59வது அமர்வுக்கான (49வது பொதுக் கூட்டம்) கூட்டறிக்கையை உறுதிப்படுத்தல்.

கௌரவ முதல்வர் அவர்கள், கௌரவ உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இக் கூட்டக்குறிப்பில் திருத்தங்கள் ஏதும் இல்லாதவிடத்து, அதனை ஒருவர் முன் மொழிந்து வழி மொழியுமாறு கௌரவ உறுப்பினர்களை கேட்டுக்கொண்டார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, எனது உரையில் விமான நிலைய விஸ்தரிப்பால் பாதிக்கப்பட்டு காணிகளை இழந்தவர்களுக்கு இது வரையில் நஷ்டஈடு வழங்கப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால் விமான நிலைய விஸ்தரிப்பு காரணமாக மாற்றுக் காணி வழங்கப்பட்டவர்களுக்கு இதுவரை காணிக்கான உறுதிப்பத்திரம் வழங்கப்படவில்லை என்றே நான் குறிப்பிட்டேன். எனவே அவ்வாறு திருத்தப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை அவர்களால் சுட்டிக் காட்டப்பட்டதற்கமைய, கூட்டறிக்கையின் பக்கம் 28ல் 6வது வரியில் " காணிகளை இழந்தவர்களுக்கு இதுவரை எந்தவித நஸ்ட ஈடுகளும் வழங்கப்படவில்லை" என இருப்பது "வழங்கப்பட்ட மாற்றுக் காணிகளுக்கும் இதுவரை உறுதி வழங்கப்படவில்லை" என மேற்கொள்ளப்பட்ட திருத்தத்துடன் பின்வருவோர் முன்மொழிந்து வழிமொழிய சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டது.

**முன் மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு. சச்சிதானந்தம் கமலரூபன்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு. மாசிலாமணி தியாகராஜா ஸ்ரீஸ்கந்தராஜா.**

2. 12.05.2022ம் திகதிய 60வது அமர்வுக்கான (50வது பொதுக் கூட்டம்) கூட்டறிக்கையை உறுதிப்படுத்தல்.

கௌரவ முதல்வர் அவர்கள், கௌரவ உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இக் கூட்டக்குறிப்பில் திருத்தங்கள் ஏதும் இல்லாதவிடத்து, அதனை ஒருவர் முன் மொழிந்து வழி மொழியுமாறு கௌரவ உறுப்பினர்களை கேட்டுக்கொண்டார்.

மேற்படி கூட்டறிக்கையானது பரிசீலிக்கப்பட்டு திருத்தங்கள் ஏதுமில்லாத நிலையில் பின்வருவோர் முன்மொழிந்து வழிமொழிய சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டது.

**முன் மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு. துரைசிங்கம் மதன்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு. தம்பிராஜா இராஜேந்திரன்.**

## • கௌரவ முதல்வர் அவர்களின் அறிவிப்புக்கள்

1. இன்றைய சபை அமர்விற்கான நிகழ்ச்சி நிரலில் பல விடயங்கள் இருப்பதனை தாங்கள் அறிந்திருப்பீர்கள். நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக நிகழ்வுகளை உரிய நேரத்தில் முடிப்பதற்கு கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன். மேலும் நிகழ்ச்சி நிரலுக்கு அப்பாற்பட்ட விடயங்களை பேசுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

2. சபையில் பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டு அது தொடர்பாக கௌரவ உறுப்பினர்கள் உரையாற்றும் போது, அவ் உரைகள் யாவும் குறித்த பிரேரணை சம்பந்தமானதாகவே இருக்க வேண்டும். அதை விடுத்து அப்பிரேரணைக்கு சம்பந்தமற்ற விடயங்கள் பேசப்படுமாயின் அவை அக் கூட்டக் குறிப்பில் சேர்க்கப்பட மாட்டாதென்பதனையும் அறியத் தருகின்றேன். மேலும் எமது மாநகர எல்லைக்கும், எமது செயற்பாட்டிற்கும் அப்பாற்பட்ட விடயங்கள் தொடர்பாக பிரேரணைகள் கொண்டு வரப்பட்டு, அது குறித்த கௌரவ உறுப்பினரால் சபையில் முன்வைக்கப்படும் போது அது தொடர்பில் எவரும் உரையாற்றவோ அல்லது கருத்துத் தெரிவிக்கவோ முடியாது என்பதுடன், அது தொடர்பாக பேசப்படுமாயின் அது கூட்டக்குறிப்பில் இடம் பெற மாட்டாது என்பதையும் அறியத் தருகின்றேன்.

3. அண்மைக் காலத்தில் எம்முடன் இணைந்து கொண்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி சார்ந்த கௌரவ உறுப்பினரான திரு.சிவராசா சிவராஜ் என்பவரது உறுப்பினர் பதவியானது கடந்த 25.05.2022ந் திகதியன்று வெளியிடப்பட்ட 2281/23ம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளது என்பதை சபையினர்க்கு தகவலாக அறியத் தருவதுடன், அவருக்கு சபை சார்பில் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

4. மட்டக்களப்பு மாநகர சபையும் உலக வங்கியும் இணைந்து மேற்கொண்ட நிதியீட்டத்தின் ஊடாக புனரமைக்கப்பட்ட மட்டக்களப்பு பொதுச்சந்தையின் கசாப்புக்கடைகளுடன் கூடிய மீன் விற்பனைப் பகுதியினை பொதுமக்களின் பாவனைக்கு கையளிக்கின்ற நிகழ்வானது 04.06.2022ந் திகதியாகிய நாளை காலை 7.00 மணிக்கு இடம்பெற உள்ளதால் கௌரவ பிரதி முதல்வர் உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

- **சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிதிக் குழுவின் சிபார்சுகள்.**

காலத்துக்கு காலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களை உள்ளடக்கிய 1947ம் ஆண்டின் மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 28ம் பிரிவுக்கு அமைவாக மட்டக்களப்பு மாநகரசபையின் நிதிக்குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டு இவ்வுயரிய சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்ட பின்வரும் விடயங்களை மாநகர சபையின் கௌரவ முதல்வர் என்ற வகையில், தியாகராஜா சரவணபவன் ஆகிய நான் இவ்வுயரிய சபைக்கு சமர்ப்பிக்கின்றேன்.

**2022.05.13ம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெற்ற 64வது நிதிக் குழுக் கூட்டத்தில் நிதிக் குழுவின் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்த நிலையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக,**

## 1. இடர்கடன் கொடுப்பனவு.

சபையில் கடமையாற்றும் கீழ்வரும் உத்தியோகத்தர்களினால் இடர்கடன் கோரி சமர்ப்பிக்கப்பட்ட 15 பேரின் விண்ணப்பங்கள் நிதிக் குழுவிற்கு பிரதம கணக்காளரினால் சமர்ப்பிக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்ட வகையில் அதில் அவை கிடைக்கப் பெற்ற ஒழுங்கு நிரலில் உள்ள இடர் கடன் விண்ணப்ப பட்டியல் தகுதியான மற்றும் அவசர அவசிய தேவை கொண்ட பட்டியல் அடிப்படையில் உள்ள முதல் 10 உத்தியோகத்தர்களுக்கும், மேலும் விசேட தேவையுடையவர்களாக உள்ள இப்பட்டியலில் அடங்காத 02 பேருக்கும் இடர்கடன் கொடுப்பனவை உரிய நிதி, நிருவாக நடைமுறைக்கும், சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கும் ஏற்ப

வழங்குவதற்கான சபையின் அனுமதியை பெறும் பொருட்டு நிதிக்குழுவினால் ஏகமனதாக சிபார்சு செய்யப்பட்டு இவ்வுயரிய சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

1. திருமதி.அ.விஜயன் - MSO
2. திருமதி.வி.நேசராஜா - MSO
3. திருமதி.S.R.M.மர்சூக் - MSO
4. திரு.பா.விஜேதரன் - W.Lab
5. திரு.எஸ்.சித்திரவேல் - H.Lab
6. திருமதி.T.கார்த்தியாயினி - Librian
7. திரு.K.H.ஜெயந்தகுமார் - H.Lab
8. திரு.M.சசிரசன் - H.Lab
9. திரு.T.சுபாஸ்கரன் - Firemen
10. திரு.சு.பார்த்தீபன் - H.Lab
11. திரு.K.சந்திரகுமார் - Driver
12. திரு.K.முகுந்தன் - H.Lab
13. திரு.S.சுரேஸ் - W.Lab
14. திரு.S.சந்திரன் - H.Lab
15. திரு.N.நாகேந்திரன் - W.Lab

அவசர தேவை கருதியும், புதிதாகவும் இடர்கடன் கோரி விண்ணப்பித்துள்ள மேற்குறிப்பிட்ட 15 பேரின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு அதில் அவை கிடைக்கப் பெற்ற ஒழுங்கு நிரலில் உள்ள இடர் கடன் விண்ணப்ப பட்டியலில் தகுதியான மற்றும் அவசர அவசிய தேவை கொண்ட பட்டியல் அடிப்படையில் உள்ள முதல் 10 உத்தியோகத்தர்களுக்கும், மேலும் விசேட தேவையுடையவர்களாக உள்ள இப்பட்டியலில் அடங்காத 02 ஊழியருக்கும் இடர்கடன் கொடுப்பனவை உரிய நிதி, நிருவாக நடைமுறைக்கும், சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கும் அமைவாக வழங்குவதற்கு பின்வருவோர் முன்மொழிந்து வழிமொழிய சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன் மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு. கந்தசாமி ரகுநாதன்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு. ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை.**

**<u>2022.05.27ம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெற்ற 65வது நிதிக் குழுக் கூட்டத்தில் நிதிக் குழுவின் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்த நிலையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக,</u>**

## 2. <u>தற்காலிக தொழிலாளர் சேவைக் கால நீடிப்பு</u>.

சபையின் அனுமதியோடு தற்காலிக அடிப்படையில் பதில் தொழிலாளி நியமனத்தைப் பெற்று கடமையாற்றி வருகின்ற உத்தியோகத்தர்களில் கீழ் விபர ஊழியர்களின் சேவைக்காலம் 2022 யூலை மாதத்தில் அவர்களது பெயருக்கு நேராக குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் முடிவடைகின்ற நிலையில் அவரது சேவைக் காலத்தை மேலும் 6 மாத காலத்திற்கு நீடித்தல் தொடர்பில், "அவரது சேவைக் காலம் நீடித்து வழங்கப்படும் பட்சத்தில் அவர் ஈடுபடுத்தப்படவுள்ள கடமை தொடர்பாக நிர்வாக தரப்பினரால் வழங்கப்படும் அறிக்கை மாநகர முதல்வரினால் அங்கீகரிக்கப்படும் பட்சத்தில் மாத்திரமே அத்திகதி முதலாக அவருக்கான சேவை நீடிப்பு நிர்வாக தரப்பினரால் வழங்கப்படல் வேண்டும்" என்ற நிபந்தனையுடன் அவரது கோரிக்கைக்கு ஏற்பவும், சபையின்

அவ்வப் போதான தேவை கருதியும் 33 பதில் தொழிலாளர்களது சேவைக் காலத்தை மேலும் 06 மாத காலத்திற்கு நீடிப்பு செய்து கொள்வதற்கான சபை அனுமதியினைப் பெறும் பொருட்டு நிதிக் குழுவினால் ஏகமனதான சிபார்சு செய்யப்பட்டு இவ்வுயரிய சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

| இல | ஊழியரின் பெயர் | நியமனத் திகதி | இறுதியாக வழங்கப்பட்டுள்ள சேவைக் கால நீடிப்புத் திகதி | சேவை முடிவுறுத்தப்படவுள்ள திகதி |
|---|---|---|---|---|
| **பதிலீட்டு சுகாதாரத் தொழிலாளி** | | | | |
| 01 | திரு.ர.குமாரவேல் | 16.05.2018 | 13.01.2022 - 12.07.2022 | 13.07.2022 |
| 02 | திரு.து.அகிலன் | 16.05.2018 | 13.01.2022 - 12.07.2022 | 13.07.2022 |
| 03 | திருமதி.நிதர்க்ஷனா ஹிக்ஷாந்தராஜ் | 08.01.2016 | 13.01.2022 - 12.07.2022 | 13.07.2022 |
| 04 | திரு.செபஸ்ரியன் கெஸ்ரன் அமலதாஸ் | 09.12.2015 | 13.01.2022 - 12.07.2022 | 13.07.2022 |
| 05 | திரு.செல்வராசா சசிகாந்தராஜா | 09.12.2015 | 13.01.2022 - 12.07.2022 | 13.07.2022 |
| 06 | செல்வி.கிட்ணன் புஸ்பராணி | 09.12.2015 | 13.01.2022 - 12.07.2022 | 13.07.2022 |
| 07 | திரு.கதிரேசப்பிள்ளை வசந்தசேகர் | 09.12.2015 | 13.01.2022 - 12.07.2022 | 13.07.2022 |
| 08 | திரு.கந்தசாமி இரத்தினபுவி | 09.12.2015 | 13.01.2022 - 12.07.2022 | 13.07.2022 |
| 09 | திரு.ஜெயசூரியம் சிவகுமார் | 09.12.2015 | 13.01.2022 - 12.07.2022 | 13.07.2022 |
| 10 | திரு.செல்வம் செல்வப்பிரதாப் | 09.12.2015 | 13.01.2022 - 12.07.2022 | 13.07.2022 |
| 11 | திரு.கருணைராஜன் ரிக்ஷின் | 09.12.2015 | 13.01.2022 - 12.07.2022 | 13.07.2022 |
| 12 | திரு.பங்கிராஸ் சாலமன் அன்ரு | 09.12.2015 | 13.01.2022 - 12.07.2022 | 13.07.2022 |
| 13 | திரு.முனியாண்டி மோகன்ராஜ் | 15.03.2015 | 13.01.2022 - 12.07.2022 | 13.07.2022 |
| 14 | திரு.சண்முகம் பிரான்சிஸ் | 15.03.2015 | 13.01.2022 - 12.07.2022 | 13.07.2022 |
| 15 | திரு.இருளாண்டி விஜயகாந்தன் | 15.03.2015 | 13.01.2022 - 12.07.2022 | 13.07.2022 |
| 16 | திரு.கணேசன் செந்தூரன் | 15.03.2015 | 13.01.2022 - 12.07.2022 | 13.07.2022 |
| 17 | திரு.மணிவண்ணன் ஜெயராஜ் | 27.05.2015 | 13.01.2022 - 12.07.2022 | 13.07.2022 |
| 18 | திரு.ராஜசிங்கம் விக்னேஸ்வரன் | 05.06.2015 | 13.01.2022 - 12.07.2022 | 13.07.2022 |
| 19 | திரு.சத்தியசீலன் சபேஸ் | 16.12.2015 | 13.01.2022 - 12.07.2022 | 13.07.2022 |
| 20 | திரு.கிருஸ்ணன் சிவராம் | 16.12.2015 | 19.01.2022 - 18.07.2022 | 19.07.2022 |
| 21 | திரு.மகேசன் ரமேஸ்குமார் | 20.06.2016 | 19.01.2022 - 18.07.2022 | 19.07.2022 |
| 22 | திரு.நாகலிங்கம் துவிகரன் | 09.12.2015 | 19.01.2022 - 18.07.2022 | 19.07.2022 |
| 23 | திரு.கனகரெத்தினம் சிவராம் | 15.03.2015 | 26.01.2022 - 25.07.2022 | 26.07.2022 |
| 24 | திரு.கெங்காதரன் சிவாகரன் | 09.12.2015 | 26.01.2022 - 25.07.2022 | 26.07.2022 |
| **பதிலீட்டு வேலைத் தொழிலாளி** | | | | |
| 25 | திரு.சீனித்தம்பி செல்வராஜா | 20.04.2015 | 26.01.2022-25.07.2022 | 26.07.2022 |
| 26 | திரு.துரைசீலன் தேவதர்சன் | 18.11.2015 | 22.01.2022-21.07.2022 | 22.07.2022 |
| 27 | திரு.மனோகரன் ஜெயராம் | 18.11.2015 | 26.01.2022-25.07.2022 | 26.07.2022 |
| 28 | திரு.மதனகேசரி திருநாவுக்கரசு | 18.11.2015 | 22.01.2022-21.07.2022 | 22.07.2022 |
| 29 | செல்வி.சரோஜினி சோமநாதன் | 18.11.2015 | 13.01.2022-12.07.2022 | 13.07.2022 |
| 30 | திரு.எந்தில்நாதன் கோபிடிலக்சன் | 16.11.2015 | 26.01.2022-25.07.2022 | 26.07.2022 |
| 31 | திரு.பொன்னம்பலம் ரவிசங்கர் | 21.11.2018 | 13.01.2022-12.07.2022 | 13.07.2022 |
| 32 | திரு.செல்வராஜா கருணாகரன் | 27.05.2015 | 22.01.2022-21.07.2022 | 22.07.2022 |
| 33 | திரு.ரெட்ணசிங்கம் உதயராஜ் | 17.03.2015 | 26.01.2022-25.07.2022 | 26.07.2022 |

DRAFT

சபையின் அனுமதியோடு தற்காலிக அடிப்படையில் பதில் தொழிலாளி நியமனத்தைப் பெற்று கடமையாற்றி வருகின்ற உத்தியோகத்தர்களில் மேற்குறிப்பிட்ட ஊழியர்களின் சேவைக்காலம் 2022 யூலை மாதத்தில் அவர்களது பெயருக்கு நேராக குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் முடிவடைகின்ற நிலையில் அவரது சேவைக் காலத்தை மேலும் 6 மாத காலத்திற்கு நீடித்தல் தொடர்பில், “அவரது சேவைக் காலம் நீடித்து வழங்கப்படும் பட்சத்தில் அவர் ஈடுபடுத்தப்படவுள்ள கடமை தொடர்பாக நிர்வாக தரப்பினரால் வழங்கப்படும் அறிக்கை மாநகர முதல்வரினால் அங்கீகரிக்கப்படும் பட்சத்தில் மாத்திரமே அத்திகதி முதலாக அவருக்கான சேவை நீடிப்பு நிர்வாக தரப்பினரால் வழங்கப்படல் வேண்டும்” என்ற நிபந்தனையுடன் அவரது கோரிக்கைக்கு ஏற்பவும், சபையின் அவ்வப் போதான தேவை கருதியும் 33 பதில் தொழிலாளர்களது சேவைக் காலத்தை மேலும் 06 மாத காலத்திற்கு நீடிப்பு செய்து கொள்வதற்கு பின்வருவோர் முன்மொழிந்து வழிமொழிய சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன் மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு. சிவம் பாக்கியநாதன்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.மயில்வாகனம் ரூபாகரன்.**

## 3. <u>மாநகர சபையின் 2022 பாதீட்டில் முன்மொழியப்பட்டுள்ள வாழ்வாதார செயற்பாட்டினை முன்னெடுத்தல்.</u>

மாநகர சபையின் 2022ம் ஆண்டுக்கான பாதீட்டில் வட்டார ரீதியாக வாழ்வாதார செயற்பாட்டினை முன்னெடுப்பதற்காக வட்டாரத்திற்கு ரூபா.1.5 மில்லியன் என்ற ரீதியில் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. எனவே இதற்கமைவாக வட்டார உறுப்பினர்களால் முன்மொழியப்பட்டுள்ள வாழ்வாதார செயற்பாடுகளுக்குத் தேவையான பொருட்களை 20 வட்டாரங்களுக்கும் அவ் வட்டார நிதி ஒதுக்கீட்டினை விஞ்சாத வகையில் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கையை உரிய பெறுகை நடைமுறைக்கும், மற்றும் நிதி நிர்வாக நடைமுறைக்கும் உட்பட்டதாக முன்னெடுப்பதற்கான சபை அனுமதியினைப் பெறும் பொருட்டு நிதிக் குழுவினால் ஏகமனதான சிபார்சு செய்யப்பட்டு இவ்வுயரிய சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

கௌரவ உறுப்பினர் திரு.சூசைமுத்து கிளனி வசந்தகுமார் அவர்கள் எழுந்து கௌரவ முதல்வர் அவர்களே, மின் தகனசாலை தொடர்பாக கதைக்க வேண்டும் எனக் கூறிய போது, கௌரவ முதல்வர் அவர்கள் குறுக்கிட்டு, அமருங்கள், இது அதற்கான தருணம் அல்ல எனக் கூறினார்.

கௌரவ உறுப்பினர் திரு.சூசைமுத்து கிளனி வசந்தகுமார் அவர்கள் அதை மறுதலித்து மிகவும் ஆக்ரோஷமாக பேசுகையில், அவ்வாறு இருக்க முடியாது. இங்கு பேச்சுச் சுதந்திரம் இல்லையா? நாங்கள் உங்களது அறிவிப்புக்குள் தலையிடக் கூடாது. நாங்கள் உங்களை மரியாதையாகத் தான் வைத்திருக்கின்றோம். கொள்வனவு தொடர்பாக கதைக்கின்ற போது தான் இதனையும் கதைக்க வேண்டும். முன்னாள் ஆணையாளர் திரு. தயாபரன் அவர்கள் உறுப்பினர்களுக்கு பேச்சுக்காக வழங்கப்பட்ட 5 நிமிட நேரத்தை இரத்துச் செய்த போது அதனை ஏற்றுக் கொண்ட நீங்கள், அவரது மற்றைய செயற்பாடுகளை ஏன் நிராகரித்தீர்கள். என்னுடைய பகுதியில் உள்ள பிரச்சனை தொடர்பாக நான் கதைப்பதற்கு அனுமதி இல்லை என்றால் இந்த சபை எதற்கு? எனக் கேள்வி எழுப்பினார். இதன் போது சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

கௌரவ உறுப்பினர் திருமதி.சசிகலா விஜயதேவா அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, கௌரவ உறுப்பினர் குறிப்பிட்ட தகனசாலை விடயம் தொடர்பாக பேசுவதற்கு

DRAFT

நிகழ்ச்சி நிரலின் இறுதியில் அவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், அதைத் தான் நானும் கூறுகின்றேன். அதாவது நிகழ்ச்சி நிரலின் ஒழுங்கில் அவருக்கு இறுதியில் பேச முடியும் எனக் கூறினார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெட்ணராஜா திலீப்குமார் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, கௌரவ பிரதி முதல்வர் அவர்களே, கௌரவ உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது வணக்கம். வாழ்வாதார செயற்பாடானது தற்போது தான் செயற்படுத்தப்படுகின்றதா? என்பது தெரியாது? கடந்த மாதம் மாநகர சபையானது வாழ்வாதார செயற்பாட்டிற்காக தையல் இயந்திரங்களை வழங்கியது எனக் கூறப்பட்டது. இங்கு மாநகர சபை எனக் கூறிய போது நான் இன்னும் அப்படி ஏதும் வழங்கப்படவில்லை எனத் தான் கூறியதாகத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், நன்றி. எனவே இதனை ஒருவர் முன்மொழிந்து ஒருவர் வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார்.

மாநகர சபையின் 2022ம் ஆண்டுக்கான பாதீட்டில் வட்டார ரீதியாக வாழ்வாதார செயற்பாட்டினை முன்னெடுப்பதற்காக முன்மொழியப்பட்டதற்கு அமைவாக வட்டார உறுப்பினர்களால் முன்மொழியப்பட்டுள்ள வாழ்வாதார செயற்பாடுகளுக்குத் தேவையான பொருட்களை 20 வட்டாரங்களுக்கும் அவ் வட்டார நிதி ஒதுக்கீட்டினை விஞ்சாத வகையில் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கையை உரிய பெறுகை நடைமுறைக்கும், மற்றும் நிதி நிர்வாக நடைமுறைக்கும் உட்பட்டதாக முன்னெடுப்பதற்கு பின்வருவோர் முன் மொழிந்து வழி மொழிய சபையினரால் அனுமதி வழங்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன் மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு.சீனித்தம்பி ஜெயந்திரகுமார்.**
**வழி மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு.மயில்வாகனம் நிஸ்கானந்தராஜா.**

4. **<u>உப பிரிவிடுகை மூலம் மாநகர சபைக்கு உரித்தாக்கப்பட்ட காணியை கொள்வனவு செய்யக் கோரல்.</u>**

உப பிரிவிடுகை ஒன்றின் மூலம் மாநகர சபைக்கு கிடைக்கப் பெற்ற கும்பிளாமடு வீதி, சத்துருகொண்டான் பிரதேசத்தில் அமைந்துள்ள காணியினை அவ்விடத்திலுள்ள Ceylon Every Home Crysade அமைப்பினர் விலையாக பெற்றுக் கொள்ள கோரி சமர்ப்பித்த 20.04.2022ந் திகதியிடப்பட்ட கடிதம் பரிசீலிக்கப்பட்டு, குறித்த காணியுடன் நாவற்கேணியிலுள்ள காணி மற்றும் ஆவியார் ஒழுங்கைக்கு அருகிலுள்ள காணி என்பவற்றையும் அரச விலை மதிப்பீட்டாளர் மூலம் அல்லது அவர்கள் மூலம் உடனடியாக மதிப்பீட்டினை செய்ய முடியாத நிலையிருக்கும் பட்சத்தில் பதிவு செய்யப்பட்ட தனியார் விலை மதிப்பீட்டாளரைக் கொண்டு அக் காணிகளின் தற்போதைய சந்தைப் பெறுமதியை மதிப்பீடு செய்து கொண்டும் அதற்கான தேவையான அனுமதிகளைப் உரிய தலைமைகளிடமிருந்து பெற்றுக் கொண்டும் அவற்றை பகிரங்க அறிவித்தல் ஒன்றின் மூலம் விற்பனை செய்வதற்கான சபை அனுமதியினைப் பெறும் பொருட்டு நிதிக் குழுவினால் ஏகமனதான சிபார்சு செய்யப்பட்டு இவ்வுயரிய சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெட்ணராஜா திலீப்குமார் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, இது கும்பிளாமடு காணியா? இந்த காணிக்குரிய

Sub Division இருக்கின்றதா? அதற்குரிய ஆவணங்கள் எல்லாம் இருக்கின்றதா? நாங்கள் மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் மக்கள் எங்களுடன் பேசுகின்ற விடயம் என்னவென்றால், Sub Divisionக்கு சமர்ப்பிக்கின்ற போது சில உறுதிகள், ஆவணங்கள் கிடைக்காத காரணத்தினால் அவர்களது Sub Division அனுமதி இன்னும் கிடைக்கப் பெறாமல் உள்ளது என்பதாகும். ஆனால் சிலர் தாங்கள் இவை எதுவும் இல்லாது Sub Division அனுமதியைப் பெற்றுள்ளதாகவும் கூறுகின்றனர். இதனை எப்படி பேரம்பேசி பெற்றுக் கொள்வதென தெரியாது எனவும் அவர்கள் கூறுவது எமது காதுகளில் கேட்கக் கூடியதாக உள்ளது. எனவே இதனை உரிய ஆவணங்கள் இல்லாது விடின் தயவு செய்து வழங்க வேண்டாம் எனவும் கூறினார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பதிலிறுத்துப் பேசுகையில், அவ்வாறு உரிய ஆவணங்கள் இல்லாது உப பிரிவிடுகைக்கான அனுமதி வழங்குவதில்லை. இது 2013ம் ஆண்டு உப பிரிவிடுகை செய்து பொது மக்களுக்கு வழங்கப்பட்ட காணியாகும். இதில் ஒரு காணி மாநகர சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனை அவர்கள் பராமரித்து வருகின்றனர். தற்போது அவர்கள் இதனை விலையாக கேட்கின்றனர். இந்தக் காணியை நாங்கள் தான் கண்டு பிடித்துள்ளோம். தற்போது இதனை நாங்கள் பராமரிக்காது விட்டால் காலப்போக்கில் அது விடுபட்டு இல்லாது போய்விடும். இது மாநகர சபைக்குரிய ஒரு பெறுமதியான சொத்து. இதனை நாங்கள் பெறுமதிக்கு கொடுத்தால் அந்த நிதியைக் கொண்டு வேறு தேவைகளுக்கு பயன்படுத்தலாம் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெட்ணராஜா திலீப்குமார் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, இந்த கும்பிளாமடு காணிக்கு சரியான நில அளவைப்படம் இல்லையெனக் கூறப்படுகிறது. அதனையும் சற்று கவனிக்கவும் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.கந்தசாமி ரகுநாதன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, கௌரவ உறுப்பினர் திரு. ஜேம்ஸ் நவரெட்ணராஜா திலீப்குமார் அவர்கள் கூறுவது வேறு காணி, இது வேறு காணி எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு. ஜேம்ஸ் நவரெட்ணராஜா திலீப்குமார் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே கௌரவ உறுப்பினர் திரு.கந்தசாமி ரகுநாதன் அவர்கள் எல்லாவற்றையும் ஆய்வு செய்து விட்டுத் தான் வந்துள்ளார் என நினைக்கின்றேன். முன்னைய ஆணையாளர் திரு.தயாபரன் இருந்த போது பல காணிகள் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன. அந்த காணிகளின் உப பிரிவிடுகையினை பரிசீலித்துப் பார்க்க வேண்டும். தற்போது கேட்கப்படும் காணிக்குப் பக்கத்தில் இருக்கின்ற காணியை கிருஸ்தவ நிறுவனம் ஒன்று நடாத்தி வருகின்றது. மத ஸ்தலமோ, சங்கமோ யாராக இருந்தாலும் இதனை சரியான முறையில் செய்ய வேண்டும். நாங்கள் ஓர் உப பிரிவிடுகைக்காக போனாலும் பிரதி ஆணையாளர் ஒரு விண்ணப்பப் படிவத்தினை வழங்கி அதனுடன் சில ஆவணங்களையும் வழங்குமாறு கோருவார். அவ் ஆவணங்களை வழங்கினால் மாத்திரமே உப பிரிவிடுகை விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும். எனவே இதனையும் சரியாக பரிசீலித்து வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், இதனை நிருவாக தரப்பினர் தெளிவாக ஆராய்ந்து செய்வார்கள். நாங்கள் இதற்கான தீர்மானத்தினை எடுத்துக் கொடுப்போம் எனவும் தெரிவித்து, வேறு கருத்துக்கள் இல்லாதவிடத்து இதனை ஒருவர் முன்மொழிந்து ஒருவர் வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார்.

உப பிரிவிடுகை ஒன்றின் மூலம் மாநகர சபைக்கு கிடைக்கப் பெற்ற கும்பிளாமடு வீதி, சத்துருகொண்டான் பிரதேசத்தில் அமைந்துள்ள காணியினை அவ்விடத்திலுள்ள Ceylon Every Home Crysade அமைப்பினர் விலையாக பெற்றுக் கொள்ள கோரி சமர்ப்பித்த 20.04.2022ந் திகதியிடப்பட்ட கடிதம் பரிசீலிக்கப்பட்டு, குறித்த காணியுடன் நாவற்கேணியிலுள்ள காணி மற்றும்

ஆவியார் ஒழுங்கைக்கு அருகிலுள்ள காணி என்பவற்றையும் அரச விலை மதிப்பீட்டாளர் மூலம் அல்லது அவர்கள் மூலம் உடனடியாக மதிப்பீட்டினை செய்ய முடியாத நிலையிருக்கும் பட்சத்தில் பதிவு செய்யப்பட்ட தனியார் விலை மதிப்பீட்டாளரைக் கொண்டு அக் காணிகளின் தற்போதைய சந்தைப் பெறுமதியை மதிப்பீடு செய்து கொண்டும் அதற்கான தேவையான அனுமதிகளைப் உரிய தலைமைகளிடமிருந்து பெற்றுக் கொண்டு அவற்றை மாநகர சபை விற்பனை செய்வதற்கு பின்வருவோர் முன்மொழிந்து வழிமொழிய சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன் மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.விஜயகுமார் பூபாலராஜா.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.துரைசிங்கம் மதன்.**

- **கௌரவ முதல்வர் அவர்களின் முன்மொழிவுகள்.**

1. **<u>ஒப்பந்த அடிப்படையில் படவரைஞராக கடமையாற்றுகின்ற செல்வி. வி.தனுஷியா என்பவரின் சேவைக்கால நீடிப்பு.</u>**

மாநகர சபையில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றி வருகின்ற மேற்படி உத்தியோகத்தரின் ஒப்பந்த சேவைக்காலம் எதிர்வரும் 20.06.2022ந் திகதியுடன் நிறைவு பெறுகின்ற நிலையில் அவரது தொடர்ச்சியான சேவையின் தேவைப்பாடு கருதி அவரது சேவைக் காலத்தை மேலும் 06 மாத காலம் நீடித்துக் கொள்வதற்கும் அவருக்கு தற்போது வழங்கப்பட்டு வருகின்ற ரூபா.30,000/- படியினை சற்று அதிகரித்து வழங்குவதற்குமான சபை அனுமதியினைக் கோரி கௌரவ முதல்வர் அவர்களால் கொண்டு வரப்படும் முன்மொழிவு.

கௌரவ உறுப்பினர் திரு.ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, இது எந்தப் பதவிக்குரியது எனக் கேட்டார்.

கௌரவ முதல்வர் அவர்கள், இவர் படவரைஞராக கடமையாற்றுவதற்காக எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஸ்ரீபன் ராஜன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்மானம் எடுத்துக் கொடுக்கின்றீர்கள். மாநகர சபையில் கடமையாற்றும் 3 பேருக்கு மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படாது இருக்கின்றது. என்ன காரணம்? அவர்களுக்கும் குடும்பங்கள் இருக்கின்றது தானே. இது அரசியல் பழிவாங்கல் இல்லை தானே? எனவும் வினவினார்.

கௌரவ முதல்வர் அவர்கள் இதற்கு பதிலளித்து பேசுகையில், மேலதிக நேரக் கொடுப்பனவு என்பது உரிய முறையில் முன் அனுமதி பெற்று வழங்கப்படுகின்ற விடயம். அவர்களது விடயம் தொடர்பில் அவர்கள் வந்து கதைக்கச் சொல்லுமாறு கேட்டுக் கொண்டதுடன், குறித்த முன்மொழிவு தொடர்பில் வேறு கருத்துக்கள் இல்லாதவிடத்து இதனை ஒருவர் முன்மொழிந்து ஒருவர் வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார்.

மாநகர சபையில் BMC/GM-44(53)/2021-17 – 02.12.2021 மூலம் இணைக்கப்பட்டு ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றி வருகின்ற மேற்படி உத்தியோகத்தரின் ஒப்பந்த சேவைக்காலம் எதிர்வரும் 20.06.2022ந் திகதியுடன் நிறைவு பெறுகின்ற நிலையில் அவரது கோரிக்கை மற்றும் சபைக்குள்ள அவரது தொடர்ச்சியான சேவையின் தேவைப்பாடு கருதி அவரது சேவைக் காலத்தை மேலும் 06 மாத காலம் நீடித்துக் கொள்வதற்கும் அவருக்கு தற்போது வழங்கப்பட்டு வருகின்ற

மாதாந்த படியினை ரூபா.35,000./- ஆக நிர்ணயித்து அதனை நீடிப்புத் திகதி முதலாக வழங்குவதற்குமாக சபை அனுமதியைக் கோரி கௌரவ முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்ட முன்மொழிவானது பின்வருவோர் முன் மொழிந்து வழி மொழிய சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன்மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு. சிவம் பாக்கியநாதன்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு. மயில்வாகனம் ரூபாகரன்.**

2. **கபடி விளையாட்டுக் கழகத்திற்கு காணி வழங்குவது தொடர்பில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட பொதுச் சபைத் தீர்மானத்தை திருத்தல்.**

மாநகர சபையின் பொது அமர்வினில் கபடி விளையாட்டு கழகத்திற்கு காணியினை வழங்குவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தில் குறித்த காணியை மதிப்பீடு செய்து வழங்குவதாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது ஒரு விளையாட்டுக் கழகத்திற்கு வழங்கப்படும் காணியாக உள்ளதால் இதனை இலவசமாக ஒப்பந்தம் ஒன்றின் ஊடாக மேற்கொள்வது என தீர்மானத்தை திருத்தம் செய்து கொள்வதற்கான சபை அனுமதியினைக் கோரி கௌரவ முதல்வர் அவர்களால் கொண்டு வரப்படும் முன்மொழிவு.

கௌரவ உறுப்பினர் திரு.ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே இது எங்கு உள்ள காணி? எனக் கேட்டார்.

கௌரவ முதல்வர் அவர்கள், குறித்த காணி திசவீரசிங்கம் சதுக்கத்தில் உள்ளது எனத் தெரிவித்ததுடன், குறித்த முன்மொழிவு தொடர்பில் வேறு கருத்துக்கள் இல்லாதவிடத்து இதனை ஒருவர் முன்மொழிந்து ஒருவர் வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார்.

மாநகர சபையின் பொது அமர்வினில் கபடி விளையாட்டு கழகத்திற்கு (Batticaloa Sports Club) காணியினை வழங்குவது தொடர்பாக ஏலவே 04.03.2022ந் திகதி மேற்கொள்ளப்பட்ட BMC/GM-48(58)/2022-14 இலக்க தீர்மானத்தில் "குறித்த காணியை மதிப்பீடு செய்து அதன் பெறுமதியில் 10%தை மாதாந்த கட்டணமாக அறவீடு செய்து கொள்வது" என்ற விடயமானது அத் தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மாறாத வகையில் நீக்கப்பட்டு "இது ஒரு விளையாட்டுக் கழகத்திற்கு வழங்கப்படும் காணியாக உள்ளதால் இதனை இலவசமாக வழங்குவது" என அத் தீர்மானத்தை திருத்தம் செய்து கொள்வதற்கான சபை அனுமதியினைக் கோரி கௌரவ முதல்வர் அவர்களால் கொண்டு வரப்படும் முன்மொழிவானது பின்வருவோர் முன் மொழிந்து வழி மொழிய சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன்மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு. புஸ்பராஜ் ரூபராஜ்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு. தம்பிராஜா இராஜேந்திரன்.**

3. **மஞ்சந்தொடுவாய் வடக்கு கிராம அபிவிருத்தி சங்கத்தினரின் 17.05.2022ந் திகதியிடப்பட்ட கடிதம்.**

மஞ்சந்தொடுவாய் வடக்கு கிராம அபிவிருத்தி சங்கத்தினரால் அப்பிரதேச கிராம மக்களின் விருப்பிற்கமைவாக அமரர் மாஸ்டர் சிவலிங்கம் அவர்களது உருவச் சிலை ஒன்றினை மஞ்சந்தொடுவாய் தொழில்நுட்ப கல்லூரியின் முன்புறமாக பிரதான வீதியில் நிறுவுவதற்கான

அனுமதி கோரி எழுதப்பட்டுள்ள கோரிக்கைக் கடிதம் தொடர்பில் சபையின் அனுமதியை பெறும் பொருட்டு இவ்வுயரிய சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெட்ணராஜா திலீப்குமார் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, தற்போது எல்லோரும் சிலை தான் வைக்கின்றார்கள். சிலைகள் வைக்கும் போது பிரதான வீதிகளை தவிர்த்து ஒரு ஒதுக்குப் புறமாக அதாவது பூங்காவில் அல்லது வேறு பொது இடங்களில் அமைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கௌரவ பிரதி முதல்வர் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, மாஸ்டர் சிவலிங்கம் அவர்களது சிலை வைப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது.இந்தச் சபை பொறுப்பேற்று 6 மாத காலம் இருக்கும் வேளையில் மறைந்த சிரேஸ்ட ஊடகவியலாளர் மட்டக்களப்புக்கு மக்களுக்காக பல சேவைகளையாற்றி அமரத்துவமடைந்த ஜோசப் பரராஜசிங்கம் அவர்களுக்கு இருதயபுரத்தில் உள்ள சுற்றுவளைவிலே ஓர் உருவச் சிலையினை அமைப்பதற்கான தீர்மானம் 2018 ஆம் ஆண்டு 6அல்து 7ஆம் மாதங்களில் எடுக்கப்பட்டிருந்தது என நான் நினைக்கின்றேன். அது 2022 ஆம் ஆண்டு இந்த சபை நிறைவடையும் வேளையில் கூட நிறைவேற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மாஸ்டர் சிவலிங்கம் அவர்களது சிலை வைப்பது சிறப்பானது. ஏனெனில் அவரும் இந்த மண்ணுக்கு பெருமை தேடித்தந்தவர். எனவே அதேபோன்று சிரேஸ்ட ஊடகவியலாளர் அமரர். ஜோசப் பரராஜசிங்கம் அவர்களுக்கான உருவச் சிலை அமைப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

கௌரவ முதல்வர் அவர்கள் இதற்கு பதிலளித்துப் பேசுகையில், எங்களால் மேற்கொள்ளப்பட்டு இதுவரை நிறைவேற்றப்படாத தீர்மானங்களின் பட்டியலினை நாங்கள் ஆணையாளருக்கு வழுங்கியிருக்கின்றோம். எனவே அவர் நிறைவேற்றப்படாத தீர்மானங்களை செய்வார். எனவே நாங்கள் அமரர். ஜோசப் பரராஜசிங்கம் அவர்களது உருவச் சிலையினையும் விரைவாக அமைப்பது தொடர்பான நடவடிக்கையினையும் மேற்கொள்வோம் எனத் தெரிவித்தார்.

மஞ்சந்தொடுவாய் வடக்கு கிராம அபிவிருத்தி சங்கத்தினரால் அப்பிரதேச கிராம மக்களின் விருப்பிற்கமைவாக அமரர். மாஸ்டர் சிவலிங்கம் அவர்களது உருவச் சிலை ஒன்றினை மஞ்சந்தொடுவாய் தொழில்நுட்ப கல்லூரியின் முன்புறமாக பிரதான வீதியில் நிறுவுவதற்கான அனுமதி கோரி எழுதப்பட்டிருந்த கடிதம் பரிசீலிக்கப்பட்டு, குறித்த சிலையினை அங்கு அமைப்பதற்குத் தேவையான துறைசார்ந்த திணைக்களங்களின் அனுமதிகளைப் பெற்று மாநகர சபைக்கு சமர்ப்பிப்பதன் ஊடாக மாநகர சபையின் தொழில்நுட்ப பிரிவின் நெறிப்படுத்தலுடன் பொதுப் போக்குவரத்திற்கும், பொது மக்கள் நடமாட்டத்திற்கும் பாதிப்பு இல்லாத வகையில் அமைத்துக் கொள்வதற்கு சபையில் பின்வருவோர் முன் மொழிந்து வழி மொழிய சபையினரால் அனுமதி வழுங்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன்மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு. சீனித்தம்பி ஜெயந்திரகுமார்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு. அப்துள்காதர் முகம்மது லத்தீப்.**

4. **<u>பாதீட்டு வேலை மாற்றம்.</u>**

கௌரவ உறுப்பினர் திரு.விஜயகுமார் பூபாலராஜா அவர்களால் 2022 பாதீட்டில் ஏலவே முன்மொழியப்பட்டிருந்த பின்வரும் வேலைகளை பொருட்களின் விலையேற்றம், தட்டுப்பாடு போன்ற காரணங்களினால் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

I. இருதயபுரம் மேற்கு 14ம் குறுக்கு தார் வீதி.
II. இருதயபுரம் மேற்கு 16ம் குறுக்கு தார் வீதி.

எனவே இந்த வேலையை இரத்து செய்து அந்த வேலைக்கு பதிலாக இருதயபுரம் மேற்கு சேமக்காலை வீதி வடிகான் அமைப்பு வேலையை மேற்கொள்வதற்கான அனுமதி கோரப்பட்டமையானது சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகின்றது.

மேற்படி 2022க்கான பாதீட்டு வேலை மாற்ற முன்மொழிவானது பின்வருவோர் முன் மொழிந்து வழி மொழிய சபையினரால் அனுமதி வழங்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன் மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.சிவானந்தன் மேகராஜ்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு. தம்பிராஜா இராஜேந்திரன்.**

கௌரவ முதல்வர் அவர்கள் மாநகர சபையினால் மின் தகனசாலை அமைக்கப்படுதல் தொடர்பில் கருத்துக்களை முன்வைப்பதற்கு கௌரவ உறுப்பினர் திரு.சூசைமுத்து கிளனி வசந்தகுமார் அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதாக சபையினர்க்கு தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.சூசைமுத்து கிளனி வசந்தகுமார் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, மின் தகனசாலை தொடர்பில், அந்த வட்டாரத்தில் நான்கு உறுப்பினர்கள் இருக்கின்றோம். இது தொடர்பாக எங்களிடம் எந்தக் கருத்தாடலோ, அதனைப் பற்றிய எந்த அறிவிப்புக்களோ எங்களுக்கு வழங்கப்படவில்லை. அதுமட்டுமல்லாது மனிதநேயம் உள்ள எந்தவொரு மனிதனும் செய்ய முடியாத ஒரு காரியத்தை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரும், மாவட்டச் செயலாளரும் சேர்ந்து மின் தகனசாலைக்குரிய அடிக்கல்லினை நாட்டியுள்ளனர். அங்கே வாழ்கின்ற மக்கள் உண்மையிலேயே சமூர்த்தி நிவாரணம் பெற்று வாழ்கின்ற மக்கள். அவர்கள் உங்களை எதிர்த்து நிற்பதற்கு சக்தியற்று இறைவனிடம் கண்ணீர் சிந்தி வரம் கேட்கின்றனர். மேலும் ஒரு சுற்றாடல் பாதுகாப்பு சான்றிதழ் கூட இல்லாது இந்த தகனசாலை அமைக்கப்பட்டுள்ளது. ஏன் இங்கேயிருக்கின்ற 36 உறுப்பினர்களும் உங்களது பகுதியில் உள்ள ஒரு மயானத்தினைத் இதற்காக தெரிவு செய்து இருக்கலாம் தானே? என்ற ஒரு கேள்வியை கேட்கின்றேன். அது அதிகளவான மக்கள் நெருக்கமாக வாழ்கின்ற மிகக் குறுகிய இடம். அங்கு நாங்கள் செய்கின்றோம். முடிந்தால் தடுத்துப் பாருங்கள் என்ற தோரணை இருக்கின்றது. பக்கத்தில் 3 நீதி மன்றங்கள் இருக்கின்றன. கொழும்பிலும் இரண்டு நீதி மன்றங்கள் இருக்கின்றன. எனவே இதற்கு சரியான ஒரு தீர்வினைப் பெற்றுத் தர வேண்டும்.

மேலும் மாநகர சபையின் பெறுகைக் குழுவிற்கு ஜனவரி மாதத்தில் நான் தெரிவு செய்யப்பட்டேன். இன்று 6 மாதங்கள் கடந்த நிலையிலும் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டு கைச்சாத்திடப்படுகின்றன. இலங்கையிலேயே அதி வேகமாக ஒப்பந்தங்கள் வழங்கப்படுகின்ற இடமாக மாநகர சபை காணப்படுகின்றது. இவை தொலைபேசி அழைப்பின் (On Call) ஊடாக நடைபெறுகின்றது. எனக்கு எந்த தகவலும் வழங்கப்படவில்லை. இங்கு எல்லா விடயங்களும் மிக நுட்பமான முறையில் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு நீங்கள் மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டும். இங்கு எந்த ஒரு திட்டமும் இல்லாது 10mm கம்பிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. 2022ம் ஆண்டு 930 பார் கம்பிகள் வினியோகிக்கப்பட்டுள்ளன. அதை விட 12mm கம்பிகள் 40 பார்கள் வரை வினியோகிக்கப்பட்டுள்ளன. இதற்கான திட்ட வரைவுகள் இருக்கின்றதா? அதைவிட சம காலத்தில் நடைபெற்ற ஒப்பந்த வேலை ஒன்றினை நான் சென்று 3 மணித்தியாலங்கள் பார்வையிட்டேன். அங்கு எந்தவித மேற்பார்வையும் இல்லை. வேலை செய்பவர்களிடம் நான்

கேட்ட போது, மேற்பார்வையில்லாது தான் செய்வார்கள் (Professional Contactors) எனவும் கூறினார். மக்களது வரிப் பணத்தினை பெறுகின்ற நீங்கள் இவ்வாறான வேலைகளைச் செய்ய வேண்டாம். மாநகர சபை நிதி மூலம் செய்யப்படுகின்ற வேலைகளின் போது பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது முகங்களைக் காட்டி அதனை வீடியோவாகக் காட்டி மக்களை தங்கள் பக்கம் இழுக்கின்ற செயற்பாடுகளும் காணப்படுகின்றன. எனவே இந்த தகன சாலையை நான் எவ்வளவு செலவு செய்தாயினும் நீதி மன்றத்தினூடாக நிறுத்துவேன் எனக் கூறினார்.

கௌரவ முதல்வர் அவர்கள் இதற்கு பதிலிறுத்துப் பேசுகையில், மின்தகனசாலை என்பது எங்களது மட்டக்களப்பு வாழ் மக்களுக்கு மிகவும் தேவையான ஒன்று. இது கொரோனா காலப்பகுதியில் எங்களது மக்கள் எல்லோருக்கும் மிகவும் பாரிய செலவினை ஏற்படுத்திய ஒரு விடயம். இவை எல்லாவற்றினையும் கருத்தில் கொண்டு தான் எங்களுக்கு சுகாதார திணைக்களம் உட்பட அனைத்து நிறுவனங்களும், மற்றும் அந்தப் பகுதி மக்கள், கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையங்கள் என்பன எங்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தனர். தரையில் வைத்து பிணத்தினை எரிப்பதனால் தங்களது சுற்றாடல் பாதிப்படைகின்றது. சுவாசத்திற்கும் பிரச்சனையாகவுள்ளது. எனவே இதற்கு பொருத்தமான வழிமுறையினைத் தெரிவு செய்யும் வகையில் மின் தகனசாலையினை அமைக்குமாறும் கேட்டுக் கொண்டதற்கு அமைவாகவே, இந்த மின் தகனசாலையை அமைப்பது தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

அடுத்தது கேள்வி கோரியது விடயமாக, நீங்கள் கேள்விச்சபையில் இருக்கின்றீர்கள். சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அதாவது மின் தகனசாலை ஒன்றை அமைப்பது என்றும், அதனை கள்ளியன்காட்டில் அமைப்பது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய பின்பு தான் கேள்வி கோருவதற்கு போயிருப்போம். இதுகள் எல்லாம் தெரியாமல் சபையில் அமைதியற்ற முறையில் இருந்து விட்டு இவ்விடத்தில் வந்து கதைக்க இயலாது. ஏனென்றால் இந்தச் சபை மூலம் தான் தீர்மானத்திற்கு வந்திருந்தோம். அந்தச் சபைத் தீர்மானத்தினை எடுத்து வாசித்துப் பாருங்கள். எவ்விடத்தில் அமைப்பது தொடர்பாக கதைக்கப்பட்டு கள்ளியங்காட்டில் அமைக்க வேண்டும் என்று தீர்மானம் எடுத்துத் தான் செய்திருந்தோம். வேறு இடத்தில் செய்வதற்கு எங்களுக்கு ஏற்பாடு இருந்தது. ஆனால் நகரத்திற்குள் இருக்கின்ற மயானத்தில் தான் சுற்றாடல் பாதிப்பு அதிகமாக ஏற்படுகின்றது என்ற காரணத்தினால் தான் நாங்கள் கள்ளியங்காட்டினை தெரிவு செய்தது. உண்மையிலே இதனை முதலில் செய்து இருந்தால் அதாவது ஒன்பது மாதத்திற்கு முன் செய்திருந்தால் இரண்டு மின் தகனசாலைகளை அமைக்க ஒரு நன்கொடையாளர் தயார் நிலையிலிருந்தார். ஆனால் இந்த கால தாமதத்தினால் நாங்கள் அந்த வாய்ப்பினை இழந்து விட்டோம். தற்போது இந்த மின்தகனசாலையை கட்டுவதனால் மட்டக்களப்பு நகரில் சுற்றாடல் பாதுகாக்கப்படுகிறதே தவிர சுற்றாடல் பாதிக்கப்படவில்லை. இரண்டாவது நாங்கள் கேள்விகோரியதில் கம்பி கொடுக்கப்படுகின்றது என்று சொன்னீர்கள். அதற்கு காரணம் என்னவென்றால், ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட கம்பிகள் எங்களுடைய களஞ்சியத்தில் இருந்தது. எங்களால் செய்யப்பட்ட மதிப்பீட்டினை வைத்து கம்பிகளை கொள்வனவு செய்ய இயலாத நிலையில் எங்களிடமிருக்கின்ற கம்பிகளை பாவிக்க வேண்டும் என்ற காரணத்தினால் எங்களுடைய பொறியியலாளர் பகுதியின் பரிந்துரைந்துகமைய கம்பியை மதிப்பீட்டிலிருந்து கழித்து அதாவது மதிப்பீட்டில் உள்ள கம்பிகளின் விலைகளை கழித்து கம்பிகளை மாநகர சபை கொடுப்பது என்ற செயற்பாடு வெளிப்படையாக ஒப்பந்தத்தினூடாக நடைபெறுகின்றது. மேலதிக விளக்கம் வேண்டுமெனில் ஆணையாளரிடமும் கேட்கலாம், பொறியியலாளரிடமும் கேட்கலாம். ஆனால் எங்களிடம் கேட்க இயலாது. சபை என்ன செய்யும் என்றால் ஒப்பந்தம் மூலம் கொடுங்கள்

என்றும், இந்த வேலையைச் செய்யுங்கள் என்றும் தீர்மானத்தை எடுத்துக் கொடுக்கும். அதை பார்க்க வேண்டிய பொறுப்பு நிர்வாக தரப்பினரிடம் உள்ளது. உங்களுக்கு சந்தேகம் இருக்கின்றது என்றால், என்ன நடந்தது என்று ஆணையாளர் சென்று கேட்கலாம் அல்லது என்ன நடந்தது என்று பொறியியலாளரிடம் சென்று கேட்கலாம் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஸ்ரீபன் ராஜன் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, இந்த மின் தகனசாலை சம்பந்தமாக சுற்றுச் சூழல் பாதுகாப்பு அதிகார சபையிடமிருந்து அனுமதி பெற்றுள்ளீர்களா? என வினாவினார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பதிலளித்துப் பேசுகையில், அது செயல்முறையில் இருக்கின்றது எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.சூசைமுத்து கிளனி வசந்தகுமார் அவர்கள் மீண்டும் பேசுகையில் கௌரவ முதல்வர் அவர்களே, அந்த வேலையை தொடங்குகின்ற நேரத்தில் நான் சுற்றாடல் சூழல் அதிகாரியிடம் கதைத்துக் கொண்டிருந்தேன். இதற்கான எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என அவர் கூறியிருந்தார். நான் வேலையைப் பற்றி கவலைப்பட வில்லை. என்ன செய்ய வேண்டும் என்று எனக்கு தெரியும் எனவும் அவர் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.விஜயகுமார் பூபாலராஜா அவர்கள் கருத்து தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, கௌரவ பிரதி முதல்வர் அவர்களே, கௌரவ உறுப்பினர்களே மற்றும் ஆணையாளர் அவர்களே அனைவருக்கம் காலை வணக்கம். இங்கு கள்ளியங்காடு சேமக்காலையில் அமைக்கப்படுகின்ற மின்தகனசாலை சம்பந்தமாக சில விடயங்களை கதைக்கலாம் என்று நினைக்கின்றேன். எங்களுடைய மக்கள் கொரோனா காலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் மிகவும் மன வேதனையுடன் வாழ்ந்த காலம் தான் அது. ஏனென்றால் அவ்வீதியால் செல்கின்ற போது பூதவுடல் தகனம் செய்யும் போது வரும் புகை எங்களது மூக்கினை துளைத்துக் கொண்டிருந்தது. ஆனால் அந்த சுற்றுச் சூழல் பாதுகாப்பு அதிகார சபையினர் தான் அன்று நாங்கள் அதனை அமைக்கும் போது கேள்வி கேட்டவர்கள். ஆனால் அன்று தகனம் செய்யும் போது ஏன் கேள்வி கேட்கவில்லை?. அது சம்பந்தமாக எந்தவொரு அறிக்கையும் சமர்ப்பிக்கவில்லை. ஆனால் மக்கள் அந்த நேரம் துன்பத்தில் இருந்தார்கள். ஆனால் இன்று போரளையில் இதைவிட குடிசனம் அண்டிய பகுதியிலே ஒரு நெருக்கமான இடத்திலே தகனசாலை அமைக்கப்பட்டு இன்று உடலங்கள் தகனம் செய்யப்படுகின்றன. எனவே வருகின்ற வேலையை தடை செய்வதற்கு நாங்கள் முற்படக் கூடாது. அதில் நாங்கள் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். அந்த வகையில் எமது மக்களுக்காக இந்த நல்லதொரு விடயத்தினை ஏற்படுத்துவதற்கு உறுதுணையாக இருந்த கௌரவ மாநகர முதல்வர், கௌரவ பிரதி முதல்வர், மாநகர ஆணையாளர் மற்றும் கௌரவ உறுப்பினர்களுக்கும் மற்றும் கல் வைக்கும் நிகழ்வில் அன்றைய நாளில் அனைத்து உறுப்பினர்களுக்கும் வட்ஸ்அப் குழுமத்தில் அறிவிக்கப்பட்டிருந்து. அதற்கமைய கலந்து கொண்ட அத்தனை உறுப்பினர்களுக்கும் மாநகர சபை உறுப்பினர் என்ற ரீதியில் நான் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன் எனக் கூறி அமர்ந்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.சூசைமுத்து கிளனி வசந்தகுமார் அவர்கள் மீண்டும் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, அவருடைய கூற்றிக்கான பதிலினை அளிக்க வேண்டும். கொழும்பில் போரளையில் அமைக்கப்பட்டிருக்கின்றது என அவர் கூறியிருந்தார். நான் அதனை ஏற்றுக் கொள்கின்றேன் கொழும்பு மாநகரத்தில் மிகவும் உயரமான இடம் போரளை என்ற வகையில் அங்கே அதனை அமைக்க சுற்று சூழல் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரியால்

அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இங்கு நாங்கள் அதனை அமைக்க வேண்டாம் என்று கூறவில்லை. எனவே நீங்கள் இதிலுள்ள சில விடயங்களை விளங்கிக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெத்தினராசா திலீப்குமார் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, கௌரவ உறுப்பினர் திரு.விஜயகுமார் பூபாலராஜா அவர்கள் நல்ல விடயத்தினை முன்னெடுத்திருந்தார். நாங்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்திருந்தோம். ஊடகவியலாளர் அவர்களின் அழைப்பிதழும் கையில் கிடைத்திருந்தது. இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டமை நல்லது. ஆனால் ஒவ்வொரு வட்டாரத்திலும் மின்குமிழ்கள் பொருத்துகின்றீர்கள். அந்த வட்டாரத்தில் நான்கு உறுப்பினர்கள் இருந்தால் அங்கு யாரை கொண்டு மின்குமிழ்களை பொருத்த வேண்டும் என்று முன்பே தீர்மானித்திருந்தீர்களோ அவரைக் கொண்டு தான் மின்குமிழ் போடப்படுகின்றது. நீங்கள் சொல்வது சரி. ஆனால் நான் என்னுடைய கருத்தினை முன்வைக்கின்றேன். அதாவது என்னுடை வட்டாரம் உட்பட அனைத்து வட்டாரங்களிலும் நீங்கள் செய்கின்ற வேலை நல்ல வேலை தான். அதில் நான் முரண்படவில்லை. நீங்கள் இல்லை இங்கிருக்கின்ற பெரிய கட்சிகளாக இருந்தாலும் அபிவிருத்தி சார்ந்த விடயங்களில் நாங்கள் கவனமாகத் தான் எங்களது கருத்துக்களை முன்வைக்கின்றோம். தேவைகள், விடயங்கள் நடக்க வேண்டும். அவை முரண்பாடு, ஊழல்கள் இல்லாமல் சரியாக நடைபெறும் என்றால் மக்கள் பார்வையிலே வரவேற்கத்தக்கது. எனவே தான் முரண்பாடு இல்லாத செயற்பாடுகளை முன்னேடுங்கள் என்று சொல்கின்றோம். அதேபோன்று ஒவ்வொரு விடயங்களிலும் கௌரவ உறுப்பினர் திரு.விஜயகுமார் பூபாலராஜா அவர்கள் கூறியது போன்று அழைப்பு விடுக்கும் விடயத்தினை முன்னேடுங்கள். சகலருக்கும் அழைப்பினை விடுங்கள். அவர்கள் வருகின்றார்களோ, வரவில்லையோ தெரியாது. அடுத்தது மின் தகனசாலை சம்பந்தமாக, அது நிச்சயமாக எங்களுக்கு வேண்டும். ஒன்றில்லை பத்து இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் நாங்களும் அந்த சபையில் இருந்தோம். நகர்ப் புறத்திற்குள் கள்ளியங்காட்டில் செய்யப் போகின்றோம் என்றோம், எந்தவொரு எதிர்ப்பும் வரவில்லை. ஆனால் அதனைச் செய்யும் போது ஏதோவொரு தரப்பினர் ஊடாக முரண்பாடு அங்கு வரும் பொழுது அந்த முரண்பாடும் இல்லாமல் முன்னெடுப்பதற்கான செயற்பாட்டினை முன்னேடுக்க வேண்டும் என்பதனை நாங்கள் விரும்புகின்றோம். அதே நேரத்தில் நீங்கள் சொன்ன மாதிரி கல்லடியில் ஒன்று அமைக்க வேண்டும். அதற்கான கௌரவ உறுப்பினர் திரு.துரைசிங்கம் மதன் அவர்களது வட்டாரத்தில் செய்ய வேண்டாம் என்ற கூற்றை நான் முன்வைக்கவில்லை. எல்லாப் பகுதியிலும் இப்படியான சில விடயங்களை கவனத்திற் கொள்ளுங்கள். இன்னொரு விடயத்தினை சபையில் கேட்க வேண்டும். இல்லாவிட்டால் சபை முடிந்து வெளியில் செல்லும் பொழுது இது குறித்துப் பேசப்படலாம். ஒரு இயற்கை அனர்த்தம் அல்லாவிட்டால் ஒரு சுனாமி பேரலை அனர்த்தங்கள் ஏற்படுகின்ற போது ஏராளமான பிணங்கள் வைத்தியசாலையில் குவியப் போகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்கள் ஏற்படும் போது அவற்றை எரியூட்டும் விடயமாக திரும்பவும் ஒரு கட்சி ரீதியான ஆர்பாட்டத்தை ஒரு அரசியல் ரீதியாக மக்களைக் கொண்டு இங்கு இருக்க கூடிய உறுப்பினர்கள் முன்னெடுப்பீர்களா? இல்லையென்று தான் சொல்ல வேண்டும். ஏனென்றால் எல்லோரும் தீர்மானித்து தான் அங்கே கொண்டு வருகின்றோம். ஒரு நூறு பிணம், இருநூறு பிணம் ஒரே நேரத்தில் எரிக்க வரும் பொழுது ஆர்பாட்டத்தினை முன்னேடுக்க கூடாது. கொழும்பிலிருந்து வந்து தேசிய கட்சிகள் தான் முன்னேடுக்க வேண்டும். எனவே இங்க இருக்கக்கூடிய அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகளும் இந்த விடயத்தில் மிகவும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

கௌரவ உறுப்பினர் திரு.செல்வராசா குமார் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, கௌரவ பிரதி முதல்வர் அவர்களே, மற்றும் கௌரவ உறுப்பினர்களே, மாநகர ஆணையாளர், உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் காலை வணக்கம். கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெத்தினராசா திலீப்குமார் அவர்கள் குறிப்பிட்ட விடயமாகத் தான் நான் கதைக்கின்றேன். மூன்று நாட்களுக்கு முன்பதாக 15 மின்குமிழ்கள் வந்ததாகவும் அதனை எனது வட்டாரத்தில் மாற்ற வந்ததாகவும் அறிந்தேன். ஏற்கனவே எமது வட்டாரத்தில் சாதாரண மின்குமிழ்கள் சேதமடைந்துள்ளதாக கூறியிருந்தேன். அதன் போது மின் குமிழ்கள் வந்தன் பிறகு மாற்றித் தருவதாக கூறியிருந்தார்கள். 3 தடவை மின் குமிழ் மாற்ற வந்ததிற்கு பிறகும் எங்களுக்கு அறிவிக்கப்படவில்லை. அது பரவாயில்லை. அவர்கள் போட்டு விட்டு போகட்டும். ஆனால் இன்று LED Panel மின் விளக்குகள் பூட்டப்படுவதாக கேள்விப்பட்டேன். மாநகர சபை உறுப்பினர் என்ற வகையில் எனக்கு எந்தவித அறிவித்தலும் இல்லை. இவற்றை நான் எனது வீட்டுத் தேவைக்கு கேட்கவில்லை. பொதுவான தேவைக்குத் தான் கேட்டிருந்தேன். இந்த மின் விளக்குகள் எந்த அடிப்படையில் வழங்கப்படுகின்றது?. உதாரணத்திற்கு இன்று மின் விளக்குகள் போடுவதற்கு வந்தவர்களிடம் அங்குள்ள ஆலயத்தில் இந்த மாதம் கதவு திறக்கின்றார்கள். அதனால் அவ்விடத்தில் ஒரு மின் விளக்கினைப் பொருத்துங்கள் என்று தொலைபேசி மூலம் கேட்டிருந்தேன். அதற்கு ஒரு உறுப்பினர் சொன்னால் மாத்திரம் தான் போடலாம் என அவர்கள் தெரிவித்தார்கள். எனவே இதனை எந்த அடிப்படையில் நீங்கள் தெரிவு செய்கின்றீர்கள்? நானும் அந்த வட்டார உறுப்பினர் தான். எனக்கு 2 அல்லது 3 மின்குமிழ்கள் போடுவதற்கு உரிமையில்லையா? நான் இன்று காலையில் ஆணையாளரிடம் இது பற்றிக் கதைத்த பொழுது, அனைத்து உறுப்பினர்களுடனும் கலந்தாலோசித்துத் தான் அதை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளதாக அவர் தெரிவித்திருந்தார். தற்பொழுது கூட மின்விளக்கு போடுபவருடன் கதைத்த பொழுது ஒரு உறுப்பினர் சொன்னால் மாத்திரம் தான் போடலாம் என அவர் தொலைபேசி மூலம் தெரிவித்தார். சபையில் மட்டுமே எல்லோரும் சேர்ந்து நடக்க வேண்டும் என்று நீங்கள் கதைக்கின்றீர்கள். ஆனால் எங்களுக்கு பெரிய வேலை கூட செய்யவில்லை. ஒரு மின் விளக்கினைக் கூட போடுவதற்கு சபையில் எங்களுக்கு ஒரு அனுமதி இல்லையென்றால் எப்படி? நீங்கள் எழுத்து மூலம் தந்தால் பரவாயில்லை, அதாவது மின்குமிழ் கூட உங்களுக்கு தர மாட்டோம் என்று எழுத்து மூலம் தாருங்கள் எனத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் குறுக்கிட்டு பதிலளித்துப் பேசுகையில், LED மின்குமிழ்கள் போடப் போகின்றோம் என்று இந்தச் சபையில் தான் கதைத்தோம். அதற்கான உங்களுடைய முன்மொழிவுகளை தந்து விட்டீர்களா? என வினாவினார்.

கௌரவ உறுப்பினர் திரு.செல்வராசா குமார் அவர்கள் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், மன்னிக்க வேண்டும் கௌரவ முதல்வர் அவர்களே, மின்விளக்குகளுக்கு பொறுப்பாக கௌரவ பிரதி முதல்வர் அவர்களை நியமித்து இருக்கின்றோம் என்று ஆணையார் சொன்னார். நாங்களும் சபையில் தான் இருக்கின்றோம். ஆனால் எங்களிடம் இதுவரைக்கும் யாராவது தொலைபேசி அழைப்பினை மேற்கொண்டு கேட்கவில்லை எனத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பதிலிறுக்கையில், இதனை தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு கேட்கவில்லை. சபையில் தான் தெரிவித்திருந்தேன். சகல வட்டாரங்களிலும் LED மின்குமிழ்கள் போடப் போகின்றோம். எனவே முக்கியமான சந்திகளின் பெயர்களை தாருங்கள் என்று கேட்டிருந்தோம் தானே? எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு. ஜேம்ஸ் நவரெத்தினராசா திலீப்குமார் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, நீங்கள் சபையில் கேட்டிருந்தீர்கள். இங்கு நடக்கின்ற விடயம் என்னவென்றால், சபையை சுருக்கமாகவும், ஒழுங்காகவும் கொண்டு போகலாம். ஏனென்றால் பொதுவான சந்திகளில் தான் அந்த மின்குமிழ்கள் போடப்பட்டிருக்கின்றது. அதில் ஒரிரு விடயங்கள் பாரட்டப்பட வேண்டியது. என்னவென்றால் பொதுமக்களுக்கான பொதுச் சந்திகளில் போட்டிருக்கின்றார்கள். ஆனால் ஆரம்ப காலங்களில் கட்சி சார்ந்த நபர்களின் வீடுகளுக்கு முன்பாக தான் மின்குமிழ்கள் போட்டுக் கொண்டு வந்தார்கள். தற்போது அதில் மாற்றமிருக்கின்றது. அதை பொதுமக்கள் சார்பில் நான் வரவேற்கின்றேன் எனத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பதிலளித்து பேசுகையில், நன்றி. நான் இந்த மேசையிலிருந்து தான் LED மின்குமிழ்கள் போடப் போகின்றோம். முக்கியமான சந்திகளின் பெயர்களை கொடுக்கும் படி கூறியிருந்தேன். அதன் படி வந்த கோரிக்கைகளை வைத்துக் கொண்டு பட்டியலிட்டு விட்டார்கள் என்று நினைக்கின்றேன். எனினும் உங்களுடைய முன்மொழிவுகளை சமர்ப்பியுங்கள் எனக் கேட்டுக் கொண்டார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஸ்ரீபன் ராஜன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, 9ம் வட்டாரத்திற்கு யாராவது தந்திருக்கின்றார்களா? என வினாவினார்.

கௌரவ முதல்வர் அவர்கள் 13 இடங்களைத் தந்திருக்கின்றார்கள் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஸ்ரீபன் ராஜன் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், “இல்லை” எனத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் அதற்குப் பதிலிறுத்துப் பேசுகையில், இங்கு ஒரு விடயம் விளங்க வேண்டும். நீங்கள் 9ம் வட்டாரத்திற்கு மட்டும் பொறுப்பான உறுப்பினர் இல்லை. 20 வட்டாரங்களுக்கும் பொறுப்பான உறுப்பினர். விகிதாசாரத்தில் வந்த உங்களுக்கு 20 வட்டாரமும் உரிமை. 20 வட்டாரங்களுக்கும் பொறுப்பான ஆட்கள். வட்டாரத்தில் வென்ற உறுப்பினர்கள் வட்டாரத்திற்குப் பொறுப்பாக இருந்தாலும் 20 வட்டாரங்களுக்கும் பொறுப்பான உறுப்பினர்கள் நீங்கள் தான் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஸ்ரீபன் ராஜன் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், நாங்கள் மூன்று உறுப்பினர்களும் சேர்ந்து 2022ம் ஆண்டு பாதீட்டில் உள்வாங்கச் சொல்லி கடிதம் தந்திருந்தோம். நீங்கள் அதனை சேர்த்திருந்தீர்களா? என வினாவினார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், பாதீடு முடிந்த பிறகு தான் தந்திருந்தீர்கள் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஸ்ரீபன் ராஜன் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், நீங்கள் இந்த ஆசானத்தில் இருந்து கொண்டு பழி வாங்கல் செய்கின்றீர்கள். அதுவும் அரசியல் பழி வாங்கல் எனத் தெரிவித்தார். முன்னாள் ஆணையாளருடன் இருந்த ஆட்களை எல்லாம் மாற்றி போடுகின்றீர்கள். கட்சி வளர்க்க அரசியல் செய்கின்றீர்கள் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.யூசைமுத்து பிலிப் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், எனது வட்டாரத்தில் 13 இடங்களுக்கு தந்திருக்கின்றார் என்று சொன்னீர்கள். அவற்றை பொது மக்களா தந்திருக்கின்றார்கள்? என வினாவினார். பொது மக்கள் தந்த இடத்திற்கு எப்படி



DRAFT

போடலாம். நாங்கள் தான் தர வேண்டும். அவர்களுடைய வீட்டுக்கு அருகில் போடச் சொன்னால் போட்டு விடுவீர்களா? என வினாவினார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பதிலளித்து பேசுகையில், பொதுமக்கள் போடச் சொல்லி தந்திருக்கின்றார்கள். இங்கு வேலைக்குழு இருக்கின்றது இவர்கள் அதை தீர்மானிப்பார்கள் என தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.யூசைமுத்து பிலிப் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், வட்டாரத்தில் நான்கு உறுப்பினர்கள் இருக்கின்றோம் நாங்கள் தான் தீர்மானிக்க வேண்டும் என தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், அப்படிச் சொல்ல இயலாது. நீங்கள் வட்டாரத்து உறுப்பினர் அதை ஒத்துக் கொள்கின்றேன்.ஆனால் அவர்கள் தனியாக வட்டாரத்துக்கு பொறுப்பான ஆட்கள் இல்லையென்பதை நீங்கள் ஒத்துக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, நீங்கள் தவறான கருத்துக்களை சொல்லக் கூடாது. நாங்கள் 9ம் வட்டாரத்தில் போட்டி போட்டு தோற்றனாங்கள். பின்னர் நாங்கள் போனசில் வந்தனாங்கள். அதனால் நீங்கள் சுற்றி வளைத்து எல்லா வட்டாரத்திற்கும் பொறுப்பானவர்கள் என்று கூறுகின்றீர்கள். அப்படியென்றால் நான் உங்களுடைய வட்டாரத்தில் வந்து போடுகின்றேன் என தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், சரி போடுங்கள் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை அவர்கள் தொடர்ந்து பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, தயவு செய்து நன்றாக கேட்டுக் கொள்ளுங்கள். எங்களுடைய சபை ஓட்சனில் இருக்கின்றது. எப்போது களட்டப் போகின்றார்களோ தெரியாது. எங்களுடைய கடைசி ஆசையை நிறைவேற்றுங்கள். மற்றும் இன்னுமொரு விடயத்தினை சொல்லுகின்றேன். சமீபத்தில் வீரகேசரியில் உங்களுடைய அழகான புகைப்படம், ஆணையாளருடைய புகைப்படம், பொறியியலாளரின் புகைப்படத்தினையும் பார்த்தேன். தனியாருடன் சேர்ந்து அழகு படுத்த போகின்றீர்கள் என்ற திட்டம் இருப்பதாகவும் சொன்னீர்கள். தயவு செய்து அந்த திட்டம் என்ன? என்பதையும் எங்களுக்கு விளங்கப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஸ்ரீபன் ராஜன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், வாழ்வாதாரத்திற்கும் என்ன மாதிரி? பட்டியலில் வந்தவர்களுக்கு இருக்கா இல்லையா? என வினாவினார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பதிலளித்து பேசுகையில், பட்டியலை தாருங்கள். தராமால் கேட்கக் கூடாது தானே எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஸ்ரீபன் ராஜன் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், நாங்கள் தந்து தந்து களைத்துப் போய் விட்டோம் எனத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், தனியார் நிறுவனங்களுடன் ஒரு நாட்டின் அபிவிருத்தி, பிரதேசத்தின் அபிவிருத்தி என்பவற்றை தனியாக அரசாங்கத்தினால் செய்ய இயலாது. அரசாங்கத்தினால் செய்ய இயலாது என்ற நிலையில் தான் எங்களுக்கு சென்டர் மீடியம், சிறுவர்

பூங்கா, சுற்று வளைவுகள் எல்லாவற்றையும் பராமரிப்பது பெரிய செலவாக இருந்தது. சில சிறுவர் பூங்காக்களுக்கு பகல், இரவு காவலாளி போட வேண்டியிருந்தது. எங்களிடம் அவ்வளவு ஆளணி இல்லை. ஒரு நாளைக்கு 8 மணித்தியால வேலையென்றால் மூன்று பேர் தேவைப்படுகின்றது. அதனால் தான் தனியார் நிறுவனங்களுடன் பங்குதாரர் ஆகினோமென்றால் இந்த நடவடிக்கையினை நாங்கள் பார்க்கலாம். அதற்கான பராமரிப்பினை அவர்களிடம் வழங்கலாம் என்ற ஓர் முன்மொழிவை முன்மொழிந்து முயற்சித்த போது அது ஒரு சாதகமான நிகழ்ச்சியாக மாறியது. அவர்கள் நிறைய கோரிக்கைகளை அனுமதித்திருக்கின்றார்கள். சென்டர் மீடியங்களை சிலர் பொறுப்பெடுக்கின்றார்கள். அதனை திட்டம் இட்டு நடைமுறைப்படுத்த போகின்றதற்கான அடுத்த கலந்துரையாடல் இருக்கின்றது. அந்த கலந்துரையாடலில் கௌரவ உறுப்பினர்களையும் அழைத்துக் கதைக்கலாம். எந்தெந்த நிறுவனங்கள் எந்தெந்தப் பொறுப்பினை ஏற்று இருக்கின்றது என்பதையிட்டு இறுதியான முடிவினை எடுக்கும் போது நீங்களும் வரலாம். அனால் நடந்தது ஒரு முதற்கட்ட கலந்துரையாடல் என்ற வகையில் அவர்களிடம் எங்களது விடயங்களை முன்வைத்திருக்கின்றோம். அவர்களும் அதனை ஏற்றுக் கொண்டு அவர்களுடைய நிறுவனங்கள் எங்களுடன் இணைந்து செயற்பட வரும் போது அதற்கான உடன்படிக்கை ஒன்றிக்கு போவோம். செலிங்கோ காப்புறுதி ஸ்தாபனத்தினர் எங்களுடைய லொட்யிஸ் பூங்காவினை பொறுப்பேற்பதாக உறுதியளித்துள்ளார்கள். அதே மாதிரி ஒவ்வொரு நிறுவனத்தினரும் ஒவ்வொன்றைப் பொறுப்பேற்பார்கள் என்றால் அவற்றைப் பராமரிப்பது இலகுவாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.செல்வராசா குமார் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, எமது பகுதியில் இன்று 10 மின்குமிழ்கள் பொருத்தப்படுவதாகவும் அதற்குரிய இடங்கள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டு விட்டதாகவும் சொல்கின்றார்கள். நான் மின் குமிழ் பொருத்தும் விடயத்தை கடிதம் மூலம் கொண்டு தரும் பொழுது உங்கள் வட்டாரத்தில் ஏற்கனவே 10 மின்குமிழ்கள் பொருத்தப்பட்டு விட்டன. இனி ஒன்றும் செய்ய முடியாது எனக் கூறுவீர்கள் எனத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசுகையில், அப்படியாயின் வேறு வட்டாரத்திற்கு உங்களது கோரிக்கையை தாருங்கள் எனக் கேட்டுக் கொண்டார்.

கௌரவ உறுப்பினர் திரு.செல்வராசா குமார் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், எனது கிராமத்தில் எனக்கு தெரிந்த இடத்தில் மின்குமிழ் பொருத்த முடியாமல் உள்ளது. இந்த நிலையில் எனக்கு தெரியாத கிராமத்தில் மின் குமிழ் பொருத்துவதற்கு கடிதம் தரச் சொல்கின்றீர்களே? கௌரவ முதல்வர் அவர்களே, இது சரியான கேள்வியா? எனக் கேட்டார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பதிலளித்து பேசுகையில், உங்களுடைய கோரிக்கையினை தாருங்கள். அடுத்த முறையில் போடலாம் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.செல்வராசா குமார் அவர்கள் பேசுகையில், ஒரு வட்டாரத்திற்கு எத்தனை மின்குமிழ்கள் பத்தா? அல்லது பதினைந்தா? என வினாவினார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பதிலளித்துப் பேசுகையில், 10 மின்குமிழ்கள் எனத் தெரிவித்தார்.

கௌரவ திரு.செல்வராசா குமார் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், நான் மூன்று மின் குமிழ்களை தான் தேவையான இடத்திற்கு கேட்கின்றேன். மிகுதிகளை உங்களுக்கு விரும்பிய இடத்தில் போடுங்கள். மூன்று மின் குமிழ்களைத் தான் பொதுவான இடங்களுக்கு போடக்

கேட்கின்றேன். அவற்றை பாடசாலைக்கு முன்பாகவும், ஆலயங்களுக்கு முன்பாகவும், விமான நிலையம் - பாடசாலை அமைந்துள்ள சந்தியிலும் தான் போட நான் கேட்கின்றேன்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், தற்பொழுது பொருத்துகின்ற இடங்கள் பிழையென்றால் சொல்லுங்கள் மாற்றுவோம் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஸ்ரீபன் ராஜன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, அனைத்து கௌரவ உறுப்பினர்களிடமும் ஓர் அன்பான வேண்டுகோள். நியாயமாக நடக்கின்ற உறுப்பினர்கள் தான் இங்கு இருக்கின்றார்கள், தட்டிக் கேட்கின்றார்கள், சந்தோஷமாக இருக்கின்றது. திரும்பவும் விடயத்திற்கு வருகின்றேன், அதாவது அந்த மூன்று பேருக்கு மேலதிக நேர கொடுப்பனவு கொடுக்கப்படவில்லை. இந்தச் சபையில் யாருக்கு காசு கொடுக்க வேண்டும் என்று எல்லாம் நீங்கள் தீர்மானிக்கின்றீர்கள். இந்த மூன்று பேருக்கும் மேலதிக நேரக் கொடுப்பனவை கொடுக்கின்றா?, இல்லாயென்பதை? சபையில் தீர்மானம் எடுத்தா வழங்குவது. இது தொடர்பில் கௌரவ உறுப்பினர்கள் நியாயத்தினை கதைக்கட்டும் எனக் கூறினார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பதிலளித்து பேசுகையில், மேலதிக நேரக் கொடுப்பனவு கொடுப்பது என்பது மேலதிக நேரத்தில் ஒரு வேலை செய்யப்பட்டால் தான் ஆகும். வெறுமனே கையெழுத்து மட்டும் வைத்தால் கொடுக்க வேண்டுமென்று இல்லை தானே. கையெழுத்து வைத்து விட்டால் என்ன வேலை நடந்திருக்கு என்று தெரிய வேண்டும் அல்லவா?. என்ன வேலை நடத்திருக்கு என்று அறிக்கை தரத் தானே வேண்டும். காலையில் வந்து கையெழுத்து வைத்து விட்டு வீட்டிற்கு சென்று பின்பு மாலை 6 மணிக்கு வந்து கையெழுத்தினை வைத்து விட்டு நான் மேலதிக நேரம் செய்திருக்கின்றேன் என்றால் அது பிழை தானே. என்ன வேலை செய்திருக்கின்றீர்கள்?. இங்கே கேட்கப்பட்ட கேள்வி உங்களால் செய்யப்பட்ட வேலை என்ன என்பதாகும் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஸ்ரீபன் ராஜன் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, இதனை ஆணையாளரின் கீழ் நிர்வாக பகுதிக்கு விடுங்களேன் என தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ உறுப்பினர் திரு.ஸ்ரீபன் ராஜன் அவர்கள் சொல்வது சரி. ஏனென்றால் கௌரவ முதல்வர் அவர்களே, சிலவேளை ஆணையாளரை இதில் உள்வாங்கக் கூடாது என்பதாக இருக்கலாம். தயவு செய்து ஆணையாளர் நிர்வாகத்தினை அவர் செய்யட்டும். அதனால் குழப்பம் வராது. அவரிடம் கொடுங்கள் ஊழியர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவினை அவர் பரிந்துரைக்கட்டும். அதில் தலையிட வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், அவர் வந்த பிறகு தற்காலத்தில் அவற்றை அவரிடம் தான் கொடுத்திருக்கின்றோம். இது அவர் இல்லாத காலத்தில் நடந்த விடயம் தானே. அதனாலேயே தான் இதனை நாங்கள் பொறுப்பு எடுத்திருக்கின்றோம் எனவும் கூறினார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெத்தினராசா திலீப்குமார் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, அவர்கள் வேலைக்கு வராமல் கையெழுத்து வைத்திருக்கின்றார்கள் என்றால் அவர்களுக்கு எதிராக விளக்கம் கோரி ஒழுக்காற்று நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளீர்களா? என வினாவினார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பதிலளித்துப் பேசுகையில், அது நிருவாகத்தின் பொறுப்பு. என்னுடைய பொறுப்பில்லை எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெத்தினராசா திலீப்குமார் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், அது மட்டும் நிர்வாகத்திற்குரியது, இது எங்களுக்குரியதா? என வினாவினார்.

கௌரவ முதல்வர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசுகையில், இதில் நடவடிக்கை எடுக்க போனால் பல பேருக்கு நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். நாங்கள் அன்று என்ன வேலை நடந்தது என்பதைத் தான் கேட்டிருந்தோம். தரவில்லை. முன்னைய ஆணையாளருடன் மைதானத்தில் நடப்பதற்கும் மேலதிக நேரக் கொடுப்பனவு கொடுக்கப் போகின்றீர்களா? என வினாவினார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெத்தினராசா திலீப்குமார் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், இதற்குள் ஒரு விதமான அரசியல் பழி வாங்கல் இருக்கின்றது. மாநகர முதல்வர் அவர்களே, நீங்களும் சில வேளைகளைச் செய்கின்றீர்கள். நாங்களும் குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு அமைதியாக இருந்து அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றோம். பாதீட்டுக்கும் ஆதரவளித்து இருக்கின்றார்கள். ஒவ்வொரு வருடமும் 38 பேரில் உங்களை எதிர்த்த ஆட்கள் என்று 18 பேர் இருப்பார்கள். பாதீடு வரும் போது உங்களுடைய சாணக்கியத்தால் அவர்களையும் மாற்றி எடுத்து விடுவீர்கள். அது உங்களுடைய கெட்டித்தனம். அதை நான் வரவேற்கின்றேன். ஆனால் மாற்றி எடுத்ததிற்கு பிறகு குத்துறேன், குடைகின்றேன் என்று கதைப்பதில் எந்தவிதமான நியாயமுமில்லை. கடந்த சபையில் கூட சொல்லியிருந்தேன். நான் மக்கள் பிரதி நிதியாக வந்திருக்கின்றேன். எனக்கு எதுவும் தேவையில்லை. என்னவெனில் மின்குமிழ் போடுவது ஆணையாளரின் வேலை. அதைப் பற்றி இங்கு கதைத்து கொண்டு இருப்பது பிரயோசனமற்றது. அது நாளாந்த நடைபெறுகின்ற வேலை. ஆணையாளர் தான் எந்த இடத்தில் மின்குமிழ் இல்லையோ அங்கே மின்குமிழைப் போடுவார். நாங்கள் போய் நின்று புகைப்படம் எடுத்துக் கொள்ளலாம். இந்த சபையில் கௌரவ முதல்வர் ஏதோ கட்சி சார்ந்த விடயத்தில் கூட ஈடுபாடு காண்பிக்கின்றீர்களோ என எண்ணத் தோன்றுகிறது. அதை நடுநிலையாக கொண்டு போவீர்கள் என்றால் எதிர்காலத்திற்கு நல்லதாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஸ்ரீபன் ராஜன் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெத்தினராசா திலீப்குமார் அவர்களுக்கு நீங்கள் பட்ட கஸ்டம் ஏதும் தெரியாது. நீங்கள் பாதீடினை வெல்ல வைப்பதற்கு கடுமையாக ஓடியிருக்கின்றீர்கள். இந்த மின்குமிழ் பொருத்துவதை ஆணையாளரிடம் விடுங்களேன். அவர் பொருத்தட்டும் என தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.துரைசிங்கம் மதன் அவர்கள் குறுக்கிட்டுப் பேசுகையில், பாராளு மன்றத்தில் யுத்தம் நடந்த காலத்தில் தமிழ்த் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்களின் சொந்தகாரர்களை கடத்தி வைத்து விட்டு பெரும்பான்மையுடன் வெற்றி பெற அரசாங்கம் முயன்றது. ஏன் அதையெல்லாம் சொல்லி கதையுங்களேன்.ஆட்சி செய்பவர்கள் வெற்றி பெறுவதற்கு பாடுபடுவார்கள் தான் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஸ்ரீபன் ராஜன் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, ஆனால் நீங்கள் கஸ்டப்பட்டுத் தான் வெற்றி பெற்றனீங்கள் என மீண்டும் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், என்ன கஸ்டப்பட்டாலும் 2/3 பெரும்பான்மையுடன் வென்ற பாதீடு இது எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஸ்ரீபன் ராஜன் அவர்கள் அவர்கள் பேசுகையில், நீங்கள் தப்பாக நினைக்க வேண்டாம். தாயாரின் இறப்பு ஒரு பக்கம், மறு பக்கம் பாதீடு. அதைத் தான் நீங்கள் கஸ்டப்பட்டுர்கள் எனச் சொன்னேன் என்று தெரிவித்தார்.

## <u>சபையினர்க்கான அறிவிப்புகள்.</u>

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில் சபையினர்க்கான இரண்டு அறிவிப்புகள் உள்ளன. அதாவது மாநகர சபையின் நான்கு பொது நூலகங்கள் தரமுயர்த்தப்பட்டுள்ளன. அதற்கமைவாக ஊழியர்களை உள்வாங்குவது என சபையில் ஏலவே தீர்மானித்திருக்கின்றோம். முதல் கட்டமாக உள்ளக ரீதியாக விண்ணப்பங்களை கோருவது என்றும், இரண்டாவது கட்டமாக 2018ம் ஆண்டிற்கு பிற்பாடு இளைப்பாறிய ஊழியர்களின் பிள்ளைகளிடமும், அதற்குப் பிறகு மூன்றாவதாக வெளியில் உள்ளவர்களிடம் இருந்தும் கோருவது என்பதாகும். அதற்கமைய தீயணைப்பாளர்களுக்காக உள்ளக ரீதியாக விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. உங்களுக்கு தெரிந்த தொழிலாளர்கள் உரிய தகுதிகளைக் கொண்டிருப்பின் அவர்களை விண்ணப்பிக்க வலியுறுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

கௌரவ உறுப்பினர் திரு.விஜயகுமார் பூபாலராஜா அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, நல்ல விடயம். இதில் ஒரு விடயத்தினை கற்றுக் கொள்ள வேண்டியதாக இருக்கின்றது. முன்னாள் மாநகர முதல்வர் திரு.செல்லையா இராதுரை அவர்கள் நல்ல காரியம் ஒன்றினை செய்திருந்தார். என்னவென்றால் இந்த மாவட்டத்திலே விளையாட்டுத் துறையை ஊக்குவிக்க வேண்டும், இந்து விளையாட்டுத் துறையுடாக இந்த மாவட்டத்திற்கு பெருமை சேர்க்க வேண்டும் என்ற நோக்குடன் பாடுமீன் விளையாட்டுக் கழகத்தில் இருந்த பல பேருக்கு வேலை வாய்ப்பினை பெற்றுக் கொடுத்து அதனை ஒரு மாநகர சபை விளையாட்டு அணியாகவும் ஒருங்கிணைத்திருந்தார். அவ் அணி ஒரு காலத்தில் சர்வதேச ரீதியிலும், ஒரு தேசிய ரீதியிலும் ஒரு முன் மாதிரியான விளையாட்டுக் கழகமாக திகழ்ந்தது. அதே போன்று எங்களுடைய காலத்திலும் பல இளைஞர்கள் சர்வதேச ரீதியிலும், தேசிய ரீதியிலும் வெற்றிகளை ஈட்டியிருந்தாலும் கூட இன்று எந்த விதமான வேலை வாய்ப்புமின்றி நடுத் தெருவிலே நிற்கின்ற வீரர்களாகவே காணப்படுகின்றார்கள். ஆகவே இப்படியான நிலையிலேயே உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் ஒரு உறுதிப்பாடு கொண்ட விளையாட்டு வீரர்களாகவே அவர்கள் எங்களுடைய மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துக் கொண்டிருக்கின்றார்கள். தற்காலத்திலும் தேசிய நிலையில் பார்த்தால் கபடி அணியிலே ஐந்து வீரர்கள் எமது மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஆகவே அவர்களையும் இதற்குள் உள்வாங்கி எடுப்தோம் என்றால் தீயணைப்பு படை பிரிவுக்குள் திடகாத்திரமும் மன வலிமையும் கொண்ட ஒரு தொழிலாளியை உள்வாங்கியதாக இருக்கும் என்பதுடன் அது நாங்கள் எமது விளையாட்டுக்கு முன்னுரிமை கொடுத்ததாகவும் இருக்கும் என தயவாகக் கேட்டுக் கொண்டு இதையும் உள்வாங்குமாறு கேட்டுக் கொள்வதாகத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பதிலளித்து பேசுகையில், இந்த உள்ளீர்ப்பினை மூன்று கட்டங்களாகத் தான் உள்வாங்க போகின்றோம். முதலாவது உள்ளகமாக, இரண்டாவது எங்களிடம் வேலை செய்து இளைப்பாறிய வேலைப் பகுதி, சுகாதாரப் பகுதி ஊழியர்களின் பிள்ளைகளிடம், அடுத்து மூன்றாவது கட்டத்திற்குப் போகும் போது நீங்கள் குறிப்பிட்டது போன்று விளையாட்டு வீரர்களையும் உள் வாங்கலாம் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.யூசைமுத்து பிலிப் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், மூன்றாவது கட்டம் போகும் போது மாநகர சபை எல்லைக்குட்பட்ட நபர்களுக்கு சந்தர்ப்பங்களை

DRAFT

வழங்குமாறும் மாநகர சபையின் எல்லைக்கு வெளியில் இருக்கின்ற நபர்களுக்கு சந்தர்ப்பங்களை வழங்க வேண்டாம் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.விஜயகுமார் பூபாலராஜா அவர்கள் மீண்டும் கருத்துத் தெரிவிக்கையில், இது விடயத்தில் விளையாட்டு வீரர்களையும் உள்வாங்குவது என சபையில் தீர்மானம் ஒன்றை எடுப்போம். தீர்மானம் இல்லாமல் அவர்களை உள்வாங்குவது என்பது சாத்தியமற்றதாக இருக்கும். ஆகவே சபையில் தீர்மானம் எடுப்போம் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெத்தினராசா திலீப்குமார் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், விளையாட்டு வீரரோ அல்லது ஊழியர்களின் பிள்ளைகளோ அவர்கள் யாராக இருந்தாலும் விண்ணப்பதில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு தகைமையுடையவராயின் மட்டுமே அதற்கு விண்ணப்பிக்கலாம் என தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.கந்தசாமி ரகுநாதன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, பொது நூலகம் தரம் உயர்த்தல் சம்பந்தமாக நான் ஒரு கருத்தைத் தெரிவிக்கலாம் என நினைக்கின்றேன். எமது வட்டாரத்தில் உள்ள நூலகம் வாசிப்பகமாகத் தான் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அங்கு பத்திரிகை மட்டும் தான் வருகின்றது. அமரத்துவமடைந்த கௌரவ உறுப்பினர் திரு.வேலுப்பிள்ளை தவராசா அவர்கள் நூலகக் குழுவின் தலைவராக இருந்த போது என்னால் அவரிடம் வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய அவரால் சிபாரிசு செய்யப்பட்டு இதுவும் தரமுயர்த்துவதற்காக அனுப்பப்பட்டது. ஆனால் அவற்றில் நான்கு நூலகங்கள் தான் தரமுயர்த்தப்பட்டு வந்தன. அங்கே உள்ள குறைபாடு என்னவென்றால், பத்திரிகை மட்டும் தான் அங்கு வருகின்றது. ஆனால் அதற்குரிய தளபாடங்களோ, ஆளனிகளோ இல்லை. அதற்குப் பயன்படுத்தக்கூடிய வளம், இடவசதி என்பன அங்கு இருக்கின்றது. ஆனால் எங்களுக்குரிய தளபாடங்களோ, ஆளனிகளோ, புத்தகங்களோ அங்கு இல்லை எனத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பதிலளித்து பேசுகையில், கௌரவ உறுப்பினர் அவர்களே, இந்த விடயங்களை நூலகக் குழுவிற்கு தெரிவித்து நிதிக் குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஸ்ரீபன் ராஜன் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, கௌரவ உறுப்பினர் திரு.கந்தசாமி ரகுநாதன் அவர்கள் பேசுகையில், அங்கு பத்திரிகை மட்டும் தான் வருகின்றது என்று கூறினார். ஆனால் மாநகர சபையில் இருக்கின்ற யாட் பகுதிக்கு தற்போது பத்திரிகையும் இல்லையாம். அதை நீங்கள் நிறுத்தி விட்டீர்களாம் என்று சொல்கின்றார்கள். அதைக் கொடுங்கள். அடுத்து என்னுடைய வீதி, வடிகான் போன்ற அபிவிருத்தி வேலைகளை உறுப்பினர்கள் தான் 5%, 10% க்கு என்று எடுத்துச் செய்கின்றார்கள் என மக்கள் சொல்கின்றார்கள் எனக் கூறிய வேளையில்,

கௌரவ முதல்வர் அவர்கள் குறுக்கிட்டு பதிலளிக்கையில், அந்த விடயத்தில் எனக்கும் உடன்பாடு இல்லை. ஏதாவது முறைப்பாட்டை நிரூபித்தால் நாங்கள் அந்த ஒப்பந்தகாரரை இரத்துச் செய்யலாம் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஸ்ரீபன் ராஜன் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், கூடிய வரையில் வேலைகளை மாநகர சபையூடாக மேற்கொண்டால் மிகவும் நல்லது எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், மாநகர சபையால் நடாத்தப்பட்ட பாலர் பாடசாலையை மூடியிருக்கின்றீர்களா? புதுநகரில் இருக்கின்ற பாலர் பாடசாலையை நான் கேட்டதிற்கு அது முடியிருக்கின்றது எனத் தெரிவித்தார்கள். அது எனக்கு மிகவும் துக்கமாக இருந்தது. வறிய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் நகர்ப் புறத்திலுள்ள பாலர் பாடசாலையில் சென்று படிக்க இயலாது. தயவு செய்து இந்த மாவணர்களின் கல்விக்கு முன்னுரிமை கொடுங்கள். எனவே கௌரவ முதல்வர் அவர்களே, அந்தப் பாலர் பாடசாலையை திறந்து அந்தப் பகுதி வறிய மாணவர்கள் படிப்பதற்கு உதவி செய்யுங்கள் எனக் கேட்டுக் கொண்டார்.

கௌரவ முதல்வர் அவர்கள் இதற்கு பதிலிறுத்துப் பேசுகையில், மாகாண சபை திருத்தச் சட்டத்தினூடாக அனைத்து பாலர் பாடசாலைகளும் பாலர் பாடசாலை முன்பள்ளி கல்வி பணியகத்தின் கீழ் சென்று விட்டது. ஏற்கனவே நாம் மாநகர சபையின் கீழ் ஆசிரியர்கள் ஆளனி இருந்த படியால் மூன்று பாலர் பாடசாலைகளை நடாத்தி வந்தோம். அவர்கள் ஓய்வு பெற்று சென்றால் அந்த ஆளனிகள் இல்லாமல் போய் விட்டது. அதனால் முன்பள்ளி கல்வி பணியகத்தின் கீழ் அனைத்து பாலர் பாடசாலைகளும் சென்று விட்டது. தற்போது நாங்கள் ஆளனி உருவாக்க முடியாது. சட்டம் அது தான். முன்பள்ளி கல்வி பணியகத்தின் கீழ் சென்ற காரணத்தால் முன்பள்ளி கல்வி பணியகம் தான் அதனை பராமரிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை அவர்கள் தொடர்ந்து பேசுகையில், இன்று குழந்தைகளுக்கு உணவுமில்லை. இன்றைய செய்தியில் போசாக்கு இன்மையால் குழந்தைகள் சிறுவர் வைத்தியசாலையயில் அனுமதிக்கப்படுகின்றார்களாம் என்று வைத்தியர் ஒருவர் சொல்கின்றார். இதைக் கேட்க எங்களுக்கு துக்கமாக இருக்கின்றது. எனவே சாப்பாடுமில்லாத, படிப்புமில்லாத ஓர் சமூகத்தினை உருவாக்குவதற்கு மாநகர சபை இடமளிக்கக் கூடாது. தயவு செய்து மாநகர சபையில் நிதியிருக்கின்றது. எனவே நீங்கள் ஆசிரியர்களை நியமனம் செய்யுங்கள். நாங்கள் அதற்கான அனுமதியைத் தருகின்றோம் என கூறிய வேளையில்,

கௌரவ முதல்வர் அவர்கள் பதிலிறுத்துப் பேசுகையில், நாங்கள் தீர்மானம் எடுத்து நிர்வாகத்திடம் கொடுப்போம். அது சாத்தியமா என்பதை ஆணையாளர் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கட்டும் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.சூசைமுத்து கிளனி வசந்தகுமார் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, எங்கள் பகுதியில் பாரதி லேனில் இரு பிள்ளைகள் தொடர்ச்சியாக போசாக்கு இன்மையால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இரண்டும் இரட்டைக் குழந்தைகள். நாங்கள் எவ்வளவோ செலவு செய்கின்றோம். எனவே அந்தக் குடும்பங்களுக்கும் ஒரு சிறு தொகையினைக் கொடுத்து உதவி செய்யலாம் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.மாசிலாமணி சண்முகலிங்கம் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, நாங்கள் நூலகக் குழுவினால் கடந்த 27ம் திகதி கள விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தோம். அதன் போது புதூர் வாசிகசாலைக்கும் சென்றிருந்தோம். அங்கு சில குறைபாடு காணப்பட்டது. பாலர் பாடசாலை இயங்க வில்லை. அத்துடன் அங்கு மலசலகூடமும் பாவிக்க முடியவில்லை என்பதனையும் கண்டு கொண்டோம். அடுத்து பொது நூலகத்திற்குச் சென்றிருந்தோம் அங்கும் சில வேலைகள் செய்ய வேண்டியுள்ளது எனத் தெரிவித்தனர். முதற்கட்டமாக அங்கு இருந்த 2 ஊழியர்கள் தான் புதுநகருக்குச் சென்றிருக்கின்றனர் எனவும், தமக்கு எப்படியும் 5 பேர் வரை தேவை எனவும் குறிப்பிடுகின்றனர்.

DRAFT

தாங்கள் முன்னெடுக்கும் இந்த வேலைத் திட்டத்தில் உள்ளீர்க்கப்படுவோரில் 05 பேரை இங்கு வழுங்கினால் நன்றாக இருக்கும் எனவும் தெரிவித்துக் கொண்டார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பதிலளித்துப் பேசுகையில், இவ்வாறான குழுக்களின் கூட்டங்கள் முடிந்தால் உங்களது கூட்டறிக்கைகளை எமக்கு வழங்க வேண்டும். அப்படி வழங்கினால் தான் அதனை நிதிக் குழுவிற்கு கொடுத்து தீர்மானம் எடுக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை அவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது, கௌரவ முதல்வர் அவர்களே, எந்தக் குழுவினது அறிக்கையும் சபைக்கு வருவதில்லை. அப்படி இருந்தால் எதற்கு இந்த குழுக்கள்? தயவு செய்து மன்னிக்க வேண்டும். சுகாதாரக் குழு இல்லை. எப்படி இருக்கின்றது இந்த மட்டக்களப்பு நகரம்? வேலைக் குழு, நூலகக் குழு இல்லை. மாநகர சபையில் என்ன நடக்கின்றது?. தயவு செய்து இதைக் கொஞ்சம் கவனியுங்கள். இல்லாவிட்டால் அவர்களும் அப்படியே இருப்பார்கள் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.பேரின்பசாமி சுரேஸ்குமார் அவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது, கௌரவ முதல்வர் அவர்களே, கௌரவ உறுப்பினர் திரு.விஜயகுமார் பூபாலராஜா அவர்கள் குறிப்பிட்டது போன்று வேலை வாய்ப்புக்கள் வழங்கும் போது விளையாட்டு வீரர்களையும் கொஞ்சம் கவனத்தில் கொள்ளுங்கள். சபை பதவியேற்ற 2018ம் ஆண்டு விளையாட்டுக் குழுத் தலைவராக நானே இருந்தேன். அந்த நேரத்தில் வேலைக்கு ஆட்களைச் சேர்க்கும் போது உதைபந்தாட்ட வீரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வந்தது. அந்த வகையில் அகில இலங்கையில் முதன்மையான மாநகர சபையாக எமது மட்டக்களப்பு மாநகரசபை காணப்படுகிறது. தற்போது இங்கு விளையாட்டு என்பது இல்லாது காணப்படுகின்றது. 2018ம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்ட அணிக்கு தெரிவான 16 வீரர்களுக்கும் மாநகர சபையில் வேலை வாய்ப்பு வழங்குவதாக நாங்கள் ஒரு தீர்மானம் எடுத்திருந்தோம். ஆனால் அந்த விடயம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. எனவே அந்த விடயத்தினைக் கவனத்தில் கொண்டு அந்த வீரர்களை உள்வாங்கினால் நல்லது எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெட்ணராஜா திலீப்குமார் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் மற்றும் கௌரவ உறுப்பினர்களை மீண்டும் விழித்தவனாக, முன்பு மாநகர ஆணையாளராக திரு.மா.தயாபரன் அவர்கள் இருந்த காலப் பகுதியில் சபை அமர்விற்கு பொறியியலாளர் பகுதி, கணக்காளர் பகுதியினைச் சேர்ந்தவர்களும் மற்றும் ஒவ்வொரு பிரிவு சார்ந்தவர்களும் வரவில்லை என்பதில் கௌரவ முதல்வர் அவர்கள் மிகவும் ஆதங்கமாகவும் ஆவேசமாகவும் இருந்தார். தற்போது மின் தகனசாலை அமைப்பதற்கான கல் வைக்கும் நிகழ்வின் போது கூட நிருவாக தரப்பினர் மற்றும் அந்தந்த துறைசார்ந்தவர்கள் எவரும் கேள்வி கேட்பதற்கு இல்லை. கௌரவ உறுப்பினர் திரு.ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை அவர்கள் கூறியது போன்று குழுக்கள் தங்களது அறிக்கைகளை சமர்ப்பிப்பதும் இல்லை. எனவே முதல்வர் அவர்களே, தங்களது தற்துணிவில் தானா தற்போதும் நிதிக் குழுவினை ஏற்று நடாத்திக் கொண்டு செல்கின்றீர்கள்? என்ற ஒரு சந்தேகம் எனக்கு தற்போது எழுகின்றது. நான் சற்று முன் தங்களுக்கு சார்பாக கதைத்தவன. ஆனால் தற்போது யோசிக்கத் தோன்றுகின்றது. ஏனென்றால் சபை ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் முதல்வருக்கு எதிராகவும், பிரதி முதல்வருக்கு எதிராகவும் மாற்று அணியை உருவாக்கி எதிரணியில் இருந்து செயற்பட வேண்டிய கட்டாயத்தில் தான் நான் இருந்து வந்தேன். தங்களது பாதீட்டுக்கும் ஒரு வருடம் நான் ஆதரவு தெரிவித்தேன். மற்றைய வருடங்களில் நாங்கள் எதிர்த்திருந்தாலும் அது ஏற்றுக் கொள்ளத் தேவையில்லாததாக இருந்தது. நாங்கள் எதிராக எதிரணியில் சுயேச்சைக் குழுக்கள், அது சார்ந்த

அமைப்புக்கள் என ஒன்றாக இணைந்து ஆளும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினை மட்டக்களப்பு மாநகர சபையில் எதிர்த்துக் கொண்டு இருக்கின்றோம். இது நீடிக்கும் என்ற இந்த விடயத்தினை சொல்லிக் கொள்கின்றேன். ஏனென்றால் எங்களது அழுத்தம் எப்போதும் உங்களுக்கு இருக்கும். எப்பொழுதும் உங்களைப் பார்த்துக் கொண்டு தான் இருக்கின்றோம் என்பதனை எதிர்கட்சி சார்பில் தெரிவித்துக் கொள்வதாகக் கூறினார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஸ்ரீபன் ராஜன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது, கௌரவ முதல்வர் அவர்களே, பந்து காற்றை உள்ளே வைத்திருப்பதனால் தான் அது எல்லோரிடமும் உதை வேண்டுகின்றது. புல்லாங்குழல் காற்றை வெளியில் விடுவதனால் தான் அது எல்லோராலும் அரவணைக்கப்படுகின்றது. இந்தக் கதிரை எவருக்கும் சொந்தம் இல்லை. இதில் யாரும் நிரந்தரமாக இருக்கப் போவதில்லை. ஆகவே பந்து மாதிரி உதை வேண்டாமல் சிந்தித்து செயற்பட்டால் நல்லது எனவும் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து கௌரவ முதல்வர் அவர்கள், அனைவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இன்றைய அமர்வு இத்துடன் நிறைவு பெறுவதாக அறிவித்தார்.

** சபை பிற்பகல் 11.10 மணியளவில் இனிதே நிறைவு பெற்றது **

| **தயாரித்தவர்:** | **சரிபார்த்து உறுதிப்படுத்தியவர்:** |
|---|---|
| திரு.சி.ராஜ்மோகன்<br>பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்<br>சபைப் பகுதி. | நா.மதிவண்ணன்<br>மாநகர ஆணையாளர்.<br>(பதில் செயலாளர்)<br>மாநகர சபை, மட்டக்களப்பு |

**தியாகராஜா சரவணபவன்,**
கௌரவ முதல்வர்,
மாநகர சபை,
மட்டக்களப்பு.

DRAFT